# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 9

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

May 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3

# தம்பட்டமடிக்கப்படும் பொருளாதார வளர்ச்சியின் உண்மை நிலை

சர்வதேச நிதி ஆணையம் (ஐஎம்எஃப்) என்பது 189 நாடுகளின் ஒரு அமைப்பு. அது உருவாக்கப் பட்ட பல நோக்கங்களில் 'உலகம் முழுவதும் அதிகமான வேலை வாய்ப்பை உருவாக்குவது மற்றும் வறுமையை ஒழிப்பது' என்பதும் ஒன்றாகும். ஆனால் யதார்த்தத்தில், ஐஎம்எஃப்யின் பாத்திரம் என்பது, மற்ற வேலைகளோடு சேர்த்து, போலியான தகவல்களை அளிப்பதன் மூலமாக, நெருக்கடியில் சிக்கித் திணறிவரும் பிற்போக்கு அழுகல் முதலாளித்துவத்தின் புகழ்பாடுவதாக இருக்கிறது.

சமீபத்தில் ஐஎம்எஃப் வெளியிட்ட உலக பொருளாதார கண்ணோட்டத்தில், உலக அளவில் மோசமான பொருளாதாரம் இருக்கும் வேளையில் இந்தியாவானது 2016–17இல் 7.5% வளர்ச்சி வீதத்துடன் (அதாவது ஜிடிபியில்), அதாவது சீனாவைக் காட்டிலும் அதிகமாக, வேகமாக வளரும் மிகப்பெரிய பொருளாதாரமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. 'குறைந்த எரிசக்தி விலை மற்றும் அதிக உண்மையான வருவாயிலிருந்து கிடைக்கும் பலனால், தனிநபர் வாங்கும்சக்தி அதிகரிப்பதால் இந்தியாவின் வளர்ச்சி தொடரும்' என்று அது நம்பிக்கை தெரிவிக்கிறது. ஐஎம்எஃப் யின் இந்த அறிக்கை வெளியிடப்பட்டவுடன், இந்த 'பிரம்மாண்டமான' வளர்ச்சிக்கு தாங்கள் தான் காரணம் என்று இந்திய அரசாங்கமும் ஆளும் முதலாளித்துவவாதிகளின் அடிவருடி கட்டுரையெழுதும் பொருளாதார நிபுணர்களும் தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

ஆனால் கேள்வி என்னவெனில், இது யாருடைய வளர்ச்சி? இது நாட்டு மக்களின் வளர்ச்சியா அல்லது கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் உறிஞ்சி தங்களது பணப்பெட்டிக் கருவூலங்களை நிரப்பிவரும் ஒரு சில தொழிலதிபர்கள்–ஏகபோகங்களின் வளர்ச்சியா?

பொருளாதார வளர்ச்சி என்றால் சாமானிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்க வேண்டும், தொழிற்சாலை மற்றும் விவசாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி இருக்க வேண்டும், வெகுஜனங்களின் வாங்கும்சக்தி அதிகரித்திருக்க வேண்டும், வேலையின்மை குறைந்திருக்க வேண்டும், அனைத்து அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் பெருவாரியான மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதை எந்த ஒரு உணர்வுள்ள மனிதரும் ஒப்புக்கொள்வார். ஆனால் இந்த அம்சத்தில் நாம் காணும் யதார்த்த காட்சி என்ன?

உலகில் உணவுப் பாதுகாப்பின்மை குறித்து வெளியாகியுள்ள அறிக்கை குறிப்பிட்டிருப்பதாவது "பொருளாதார வளர்ச்சி அதிகம் வளர்ந்துள்ள போதிலும், ஒட்டுமொத்தமாக நல்ல உணவா என்பதை விட்டுவிடுவோம், இருக்கின்ற உணவும் அதிகமாக எடுத்துக்கொள்வதாக மாறவில்லை, என்பதைப் பார்க்கும்போது இந்து ஒட்டுமொத்த வளர்ச்சியின் பலன் ஏழ்மைக்கும் பசிக்கும் சென்றடையவில்லை என்பதைக் காட்டுகின்றது." உண்மையும் அதற்கு சாட்சியாக விளங்குகிறது. உலகில் உள்ள அனைவருக்கும் வழங்குவதற்குத் தேவையான போதுமான உணவு இருக்கிறது என்று உலகளாவிய ஆய்வு தெரிவிக்கிறது. ஒட்டுமொத்த உலக உணவு சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டால் – அனைத்து உற்பத்தி செய்யப்பட்ட உணவு, சரிவிகிதமாகப் பிரிக்கப்பட்டால் – அனைவருக்கும் ஏராளமாக வழங்கப்பட்டது போக மீதமும் இருக்கும்; சொல்லப்போனால் உலகில் ஒவ்வொருவருக்கும் அளிக்கவேண்டிய உணவுத் தேவையைக் காட்டிலும் 10% அதிகமான உணவு உலகில் உற்பத்தி செய்யப்படுகின்றது. 1.2 முதல் 2 பில்லியன் டன்கள் உணவு உலக அளவில் உற்பத்தி செய்யப்படுகையில் அதில் 30% முதல் 50% வரையிலான உணவு தட்டுகளுக்கே செல்லாமல் வீணடிக்கப்படுகின்றது. அதற்கு இந்தியா மிக முக்கியமான உதாரணமாக விளங்குகிறது.

குறைந்த ஊட்டச்சத்தும் பசியாலும் வாடும் மக்கள் அதிகமாக வாழும் நாடாக இந்தியா விளங்குகிறது. இங்கு ஒவ்வொரு நாளும் 230 மில்லியன் (23கோடி) மக்கள் பட்டினி கிடக்கின்றனர். 16.5 கோடி குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உடல் ரீதியாகவும் அறிவுரீதியாகவும் பலகீனமாகின்றனர். ஒரு குழந்தை திடகாத்திரமாக வளர்வதற்குத் தேவையான அனைத்து வைட்டமின்கள் மற்றும் ஊட்டச்சத்து வழங்குவதற்கு நாளொன்றுக்கு ரூ16 மட்டுமே தேவைப்படுகிறது. ஆனால் பெற்றோர்களின் கடுமையான வறுமை அந்த குறைந்தபட்ச தேவைக்கூட தங்களுடைய குழந்தைகளுக்கு வழங்கிட முடியாமல் செய்கிறது. கடுமையான ஊட்டச்சத்து– குறைபாடு காரணமாக இந்தியாவில் 5 மில்லியன் குழந்தைகள் தங்களது 5வது பிறந்தநாளை எட்டுவதற்கு முன்பாகவே இறந்துவிடுகின்றன என்று இந்தியக் குழந்தைகள்நல மருத்துவ அகடமி தெரிவிக்கின்றது. ஒரு நிமிடத்திற்கு ஒரு குழந்தை இறக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 3,00,000 விவசாயிகள் தங்களது வறுமையிலிருந்து மீள முடியாமல் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். இந்தியாவில் 30 நிமிடங்களுக்கு ஒரு விவசாயி தற்கொலை செய்துகொள்கின்றார். தற்போது "வளர்ந்துவரும்" இந்தியாவின் 33% கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்த கடும்மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக மக்களுக்கு ஏராளமான துயரங்கள் ஏற்பட்டதை மக்கள் பார்த்தனர். 'விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவுவதிலோ அல்லது அதிகத்–திறன்வாய்ந்த ஏவுகணைகளை வெற்றிகரமாக ஏவுவதிலோ மிகுந்த அக்கறையோடு இருக்கின்ற வளரும்' இந்தியாவின் ஆட்சியாளர்களும் அதன் அடிவருடி

தொடர்ச்சி 2ம் பக்கம்

## வரலாற்றுச் சிறப்புமிக்க ஏப்ரல் 24

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 69வது ஸ்தாபகதினம்






மதுரை, கோரிப்பாளையத்தில் ஏப்ரல் 26, 2016 அன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 69வது ஸ்தாபகதினப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் மஞ்சுநாத், கர்நாடக மாநில கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றினார், கூட்டத்தில் கலந்து கொண்டோர்.

# தம்பட்டமடிக்கப்படும் பொருளாதார வளர்ச்சியின் உண்மை நிலை ...

1ம் பக்கத் தொடர்ச்சி

சேவகர்களும் வறட்சி அல்லது வெள்ளத்தால் மாறிமாறித் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படும் கதியற்ற மக்களைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப் படுவதில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், அதற்குப்பதிலாக 'பாரத் மாதாகி ஜே' என்று கோஷமிடுவது அல்லது அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவது அல்லது மேடம் துசாபுட்ஸ் அருங்காட்சியகத்தில் பிரதமரின் மெழுகுச் சிலையை நிறுவுவது போன்றவைதான் உடனடிப் பணிகளாகத் தெரிகின்றன.

மக்களின் 'அதிகப்படியான வருவாய்' என்பது மற்றொரு ஏமாற்று கதையாகும். வறுமை இருப்பது என்பதே மக்களின் வருவாய் வேகமாகக் குறைந்து, அவர்களது வாங்கும்சக்தி குறைந்து, அதனால் தேக்கநிலையும் சந்தை நெருக்கடியும் ஏற்படுகிறது என்பதைக் காட்டுகிறது. கிராமப்புற வீடுகளில் 75% பேர் மாதவருவாயாக ரூ5,000 அல்லது அதற்கும் குறைவாக சம்பாதிக்கின்றனர் என்பதை சமீபத்தில் வெளியிடப்பட்ட சமூக–பொருளாதார கணப்கெடுப்பு அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளது. குறைவு என்றால் அது ரூ1000 ஆகவோ அல்லது ரூ10 ஆகக்கூட இருக்கலாம். 92% வீடுகளில் பிரதானமாக சம்பாதிக்கும் நபர் ரூ10,000க்கும் குறைவாக பெறுகிறார். அவர்களை எல்லாம் மிகக் கடுமையான வறுமையில் உள்ளவர்கள் என்று பட்டியலிட வேண்டும். 6.68 லட்சம் குடும்பங்கள் பிச்சை எடுத்து உயிர்வாழ்கின்றன, 4.08 லட்சம் குடும்பங்கள் பழைய பேப்பர்கள் பாட்டில்கள் துணிகளை சேகரித்து உயிர்வாழ்கின்றன. அமைப்பு சாரா தொழில்களுக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக 10 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த அர்ஜுன் சென்குப்தா இருந்த போது, நாளொன்றுக்குத் தனிநபர் வருமானம் ரூ20 என்பதை வறுமையைக் கணக்கிடுவதற்கான வரம்பாக எடுத்துக்கொண்டால் இந்திய மக்கள் தொகையில் 77% பேர் வறுமைக்கோட்டுக்கீழ் வாழ்கிறார்கள் என்று கூறினார். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிடுவதற்காக அதன் நிபந்தனைகள் உள்ளிட்ட பல வரம்புகளை செயற்கையாக தெரிவிக்க அரசாங்கமும் அதன் அடிவருடி நிபுணர்களும் முயன்றனர். ஆனாலும்கூட முதலாளித்துவ இந்தியாவில் பெருகிவரும் வறுமையை மறைக்கமுடியவில்லை. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றும் வேளையில் பல்வேறு தில்லுமுல்லுகள், தந்திரங்கள் மற்றும் புள்ளிவிபர சித்துவிளையாட்டுக்களைப் பயன்படுத்தி, 2013இல் திட்டக்கமிஷன் மானிய விலையிலான உணவுப்பொருட்கள் வறுமைக் கோட்டுக்கீழ் உள்ள மக்களின் 67% பேருக்குக் கிடைக்கும் என்று கணித்தது. நாட்டின் குடியரசுத் தலைவரும் கூட கடந்த ஆண்டு பேசுகையில் இதை உறுதிப்படுத்தினார். வறுமை மற்றும் பட்டினி அதிகரிப்பு என்பது வருவாய் குறைந்திருப்பதற்கு சான்றாகும். எனவே “தனிநபர் வாங்கும் சக்தி அதிகரிப்பால் வளர்ச்சி” என்பது வெற்று ஜம்பம் மட்டுமல்லாது அது ஒரு அப்பட்டமான பொய்யாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக வேலையின்மை என்பது அதிகரித்துவருகிறது. உண்மையை மறைக்க வேண்டும் என்பதற்காக வேலையில்லாமல் இருப்பவர்கள் அல்லது வேலையிழந்தவர்களின் எண்ணிக்கையை இந்திய அரசாங்கம் ஒருபோதும் அதிகாரப்பூர்வமாக தெரிவிப்பதில்லை. ஆனால் 18–25 வயதுடைய இளைஞர்களில் பெரும்பாலோனோர் தனித்திறன் பெற்றிருந்தபோதிலும் வேலையில்லாமல் இருப்பதை அதிகாரப்பூர்வமற்ற தகவல்களும் ஊடகங்களும் தெரிவிக்கின்றன. அதேபோல், பட்டதாரிகளில் 32% வேலையில்லாமல் உள்ளனர். கல்வி கற்றவர்களில் வேலையின்மை எந்த அளவு உள்ளது என்பதை உத்திரபிரதேசத்தின் தலைமைச் செயலகத்திற்கு 369 பியூன் வேலைக்கு ஆள் எடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரியபோது 23 லட்சம் பேர் விண்ணப்பித்தனர். அதில் 255 பேர் பிஎச்டி பட்டம் பெற்றவர்கள், 24,969 பேர் முதுகலைப் பட்டதாரிகள், 1.5 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பட்டதாரிகள். தமிழகத்திலும் கூட அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் வெளியிடும் ஒவ்வொரு தேர்வுகளுக்கும் சில நூறு இடங்களுக்கூட 8லட்சம் பேர் விண்ணப்பிக் கின்றனர். கிராமப்புறங்களில் வறுமை அதிகரித்து வருவது கிராமங்களில் நிலவும் வேலைவாய்ப் பின்மையைக் குறிக்கின்றன. கிராமப்புறங்களில் மறைமுகமான வேலையின்மை என்ற ஒன்று உள்ளது. (மறைமுகமாக வேலையில்லாமல் இருப்பவர்கள் என்பவர்கள் தாங்களாக ஏதாவது ஒரு வேலை செய்பவர்கள் அதோடு பல்வேறு ஆதாரங்களை நம்பி வேலைசெய்கின்றனர், அந்தத் துறையில் பணியாற்றுபவர்கள் பொருளாதாரத்தின் வேறுதுறைக்கு அனுப்பப்பட்டால், அவர்கள் எங்கு வேலைபார்த்தார்களோ அந்தத் துறையின், மறுசீரமைப்பு நடைபெறாவிட்டாலும், ஒட்டுமொத்த வெளியீடு குறையாது). கிராமப்புற இந்தியாவில் மறைமுகமான வேலையின்மை 25% முதல் 30% வரை உள்ளது. முதலாளித்துவத்தின் தீர்க்க முடியாத உக்கிரமான சந்தை நெருக்கடியின் காரணமாக ஏற்கனவே இருக்கும் தொழிற்சாலைகளும் மூடப் படுவதால் வேலை இழப்போரின் எண்ணிக்கை மேலும் அதிகமாகி வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குகிறது.

“எரிசக்தி விலை குறைவு மற்றும் உயர் உண்மையான வருவாய்களால் நன்மைகளை' மக்கள் பெறுகிறார்கள் என்ற ஐஎம்எஃப்யின் பார்வை குறித்துப் பார்ப்போம். இது மற்றொரு உண்மை களைத் திரித்துக் கூறுவதாகும். சர்வதேச சந்தையில் 11 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கச்சா எண்ணெயின் விலை பேரலுக்கு 37.34 டாலராகக் குறைந்ததால் இறக்குமதியில் மட்டுமே நாடு ரூ2.14 லட்சம் கோடிகளை 2016 நிதி ஆண்டில் மட்டும் சேமித்தது (முன்பு அது ரூ1.5 லட்சம் கோடிகளாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருந்தது) என்று எண்ணெய் அமைச்சகம் தெரிவித்துள்ளது. பெட்ரோலியப் பொருட்களுக்கான மானியம் குறைந்தவகையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த லாபத்தோடு இது கூடுதல் லாபமாகும். 2014–15இல் பெட்ரோலியத் துறையில் சுங்க வரி வருவாயாக மட்டும் ரூ99,184 கோடிகளை அரசாங்கம் வசூலித்துள்ளது. எண்ணெய் துறைக்கான, அதாவது சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்கான, 2014–15 ஆம் ஆண்டிற்கான அரசாங்க மானியம் ரூ60,270 கோடிகள் என்று மதிப்பிடப்பட்டிருந்த நிலையில் தற்போது அது ரூ30,000 கோடியாகக் குறைந்துள்ளது. அரசாங்கத்தோடு சேர்ந்து எண்ணெய் நிறுவன அதிபர்களும் கொளுத்த லாபமீட்டுகின்றனர். உதாரணத்திற்கு முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இன் 2015 – 16 ஆண்டிற்கான லாபம் 16% அதிகரித்து ரூ7,398 கோடியாக உள்ளது, இது கடந்த 8 ஆண்டுகளில் உச்சமாகும். இந்தலாபம் எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோகெமிக்கல் லாப மதிப்பு அதிகரித்ததால் விளைந்ததாகும். ஆனால் பெருவாரியான மக்களுக்கு அதன் பலன் கிட்டவில்லை. பெரிய தொழில்நிறுவனங்கள் மற்றும் கார்ப்பொரேட்டுகளுக்கு ஏராளமான வரிச் சலுகைகளையும் வரிவிலக்குகளையும் அளிப்பதால் அரசாங்கத்திற்கு பல லட்சம் கோடிகள் செலவாகிறது. எனவே அரசாங்கம் தனது பட்ஜெட் பற்றாக்குறையை சரிக்கட்டுவதற்காக மீண்டும் மீண்டும் கூடுதல் செஸ் வரியை விதிப்பதால் கச்சா எண்ணெய் விலைக் குறைப்பின் பலன்கள் அனைத்தையும் அரசாங்கமே எடுத்துக்கொள்கிறது. எனவே அதன் பலன்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் எண்ணெய் விலையை நிர்ணயிக்கும் பொறுப்பை எண்ணெய் நிறுவனக்களிடமே அரசாங்கம் வழங்கியதை நியாயப் படுத்தி சந்தைப் பொருளாதாரத்தின் ஆதரவாளர்கள் வக்காலத்து வாங்கினர். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை 367% குறைந்தபோதிலும் சில்லரை விற்பனையில் வெறும் 16% மட்டுமே குறைக்கப்பட்டது. பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சில்லரை விற்பனை வரி தற்போது முறையே 57% மற்றும் 55% ஆக உள்ளது, இதனால் சர்வதேச சந்தை விலையை விட இங்கு கிட்டத்தட்ட இரண்டு மடங்கு விலை உள்ளது. எனவே 'எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால் அது இந்தியாவின் உணவுப் பொருட்கள் பணவீக்கத்தைக் குறைக்க உதவியுள்ளது' என்ற ஐஎம்எஃப்யின் கூற்று உண்மைக்கு நேரெதிரானது. சர்வதேச எண்ணெய் விலை குறைந்தபோதிலும் உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்தே வருகிறது.

இறுதியாக ஜிடிபி வளர்ச்சி என்பதன் அடிப் படைகளும் அதைக் கணக்கிடும் முறையையும் பற்றிப் பார்ப்போம். ஜிடிபி என்பது உருவாக்கப்பட்ட சொத்துக்களை பகிர்ந்தளிப்பதைக் குறிக்காததால் ஜிடிபி அதிகரித்துள்ளது பற்றி கொண்டாடுவது அர்த்தமற்றது என்பதை நமது முந்தைய கட்டுரைகளில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டி ருந்தோம். அதற்கும் மேலாக ஜிடிபி கணக்கிடும் முறையும் தற்போது மாற்றப்பட்டிருக்கிறது, அதன்மூலம் ஜிடிபி என்பது 4.7%லிருந்து 6.9% ஆக திடீரென அதிகரித்துள்ளது. இந்த தந்திரமும் இந்தியப் பொருளாதாரம் சீனாவை மிஞ்சிவிட்டது என்று காட்டுவதற்கு வசதியாகிவிட்டது.

முதலாளித்துவ இந்தியாவில், மற்ற முதலாளித்துவ நாடுகளைப்போலவே, சொற்ப எண்ணிக்கையிலான பணக்காரர்களுக்கும் பெருவாரியான ஏழைகள் மற்றும் இல்லாதவர் களுக்கும் இடையிலான இடைவெளி பெரிய அளவில் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் 10% பணக்காரர்கள் தொடர்ந்து மேலும் பணக்காரர் களாகி வருகின்றனர், ஏழைகளிடம் இருப்பதைக் காட்டிலும் 370 மடங்கு அதிக சொத்துக்களை வைத்துள்ளனர். இந்திய மக்கள்தொகையில் 1% இருக்கும் மிகப்பெரும் பணக்காரர்கள் மிக வேகமாக அதிபணக்காரர்களாகி வருகின்றனர். க்னைட் ஃப்ரான்க் இந்தியாவின் தலைமைப் பொருளாதார நிபுணர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளின் இயக்குனர் சமர்பித்த அறிக்கையில் 2003 முதல் 2013 வரையிலான பத்தாண்டு காலத்தில் இந்தியாவின் பெருங்கோடீஸ்வரர் களின் எண்ணிக்கை 23 லிருந்து 60 ஆக, 161%, அதிகரித்துள்ளது, உயர் வருவாய் ஈட்டுபவர்களின் எண்ணிக்கை 598லிருந்து 1576 ஆக, 164% அதிகரித்துள்ளது. பொருளாதார வளர்ச்சி வீதம்பற்றி என்னதான் குதூகலித்தாலும் சமத்துவ அடிப்படையில் பார்த்தால் ஏற்றத்தாழ்வு மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளது என்பது தெளிவாகிறது. “உலக பொருளாதாரத்தின் ஒரு பிரகாசமான புள்ளி” என்று இந்தியாவை ஐஎம்எஃப் வருணிப்பதை போற்றிப்புகழும் அரசாங்கம் மற்றும் அவர்களின் அடிவருடி பொருளாதார நிபுணர்கள் மற்றும் கட்டுரையாளர்களின் நிலைப் பாட்டை ஆதரிக்க முடியாமல் இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன், “இது ஒரு கண் குருடர்களின் நிலத்தில் உடையவன் அரசன் என்றும் வருணித்துள்ளார்.” வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரம் என்பது பற்றி 'நன்னிலை உணர்வு' கொள்ள வேண்டாம் என்று எச்சரித்துள்ள அவர், ஒவ்வொரு இந்தியருக்கும் நாகரீகமான வாழ்வாதாரத்தை வழங்குவதற்கு இன்னும் வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார். தொழிற்சாலை உற்பத்தியில் வேகமில்லை, நிறுவப்பட்டுள்ள அளவில் 30% பயன்படுத்தப்படாமல் உள்ளது என்பதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் மரித்துவரும் முதலாளித்துவத்தில் இதைவிட வேறு காட்சியைக் காண முடியாது என்ற உண்மையை மட்டும் திரு ரங்கராஜன் கூறவில்லை. மாறாக சூழ்நிலை மேன்மேலும் மோசமடையும் சாமானிய மக்கள் மூச்சுத் திணறித் திண்டாடுவர், பணக்காரர்கள் தங்களது சொத்துக்களை குவித்துவருவர்.

# கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான்-யின் 9வது மாநாட்டிற்கு தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் அனுப்பிய செய்தி

(தங்களது 20.02.2016 தேதியிட்ட கடிதத்தில் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் கட்சியானது கேட்டுக்கொண்டதற்கிணங்க, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 9வது மாநாட்டிற்கு செய்தி ஒன்றினை அனுப்பியிருந்தார். கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் கட்சியின் கடிதமும், தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் அனுப்பிய செய்தியும் கீழே தரப்பட்டுள்ளது.)

பெறுநர்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

அன்புள்ள தோழர்களே,

இவ்வாண்டு 2016 மார்ச் மாத இறுதியில் கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் கட்சியின் 9வது மாநாடு நடைபெறவிருப்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு மாநாடு நடைபெறவிருக்கும் தேதி மற்றும் இடம் ஆகிய இரண்டையுமே நாங்கள் இப்போது அறிவிக்கவில்லை. இதே காரணத்தினால், சகோதர கட்சிகளின் பிரதிநிதிகளை அழைக்க முடியாமைக்கு நாங்கள் ஆழ்ந்து வருந்துகின்றோம்

ஆனால், உங்களிடமிருந்து ஒற்றுமைக்கான வாழ்த்துச்செய்திகளை மார்ச் மாதம் 15ஆம் தேதிக்குள் பெற்றால் மிகவும் மகிழ்வோம். அதில் நாங்கள் மிகவும் உற்சாகம் அடைவோம்.

டாக்டர் ஷபீக் அகமது

சர்வதேசப் பிரிவு

கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான்

பிப்ரவரி 20, 2016

## பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது மாநாட்டிற்கு அனுப்பிய ஒருமைப்பாட்டு வாழ்த்துச்செய்தி

பெறுநர்

பொதுச்செயலாளர் அவர்கள்

கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான்

அன்பார்ந்த தோழரே,

மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் தோற்றுவித்த சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பாக, உங்களது 9வது கட்சி மாநாட்டிற்கு வருகை புரிந்திருக்கும் பிரதிநிதித் தோழர்களுக்கு நான் எனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். பாசிச பாகிஸ்தான் அரசாங்கத்தின் கடும் தடைகள், கொடுமையான அடக்குமுறைகள் மற்றும் மத அடிப்படைவாத விஷச்சூழலுக்கு மத்தியில் மார்க்சிசம்–லெனினிசம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பதாகையை உறுதியாக உயர்த்திப்பிடித்து நீங்கள் ஓர் முன்னுதாரணம் காட்டியிருக்கின்றீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது செவ்வணக்கத்தை வழங்குகின்றேன்.

உலகிலுள்ள அனைத்து ஏகாதிபத்திய–முதலாளித்துவ நாடுகளிலும், அது வளர்ச்சியடைந்த அல்லது வளர்ச்சி குன்றிய நாடாயிருந்தாலும் அங்கிருக்கும் பாட்டாளி வர்க்க மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் இப்போது தாங்கவொணா துயரத்தினை சந்தித்துகொண்டிருக்கின்றனர் என்பதில் எங்களுடன் நீங்கள் நிச்சயம் உடன்படுவீர்கள். கடந்த நூற்றாண்டில் மாபெரும் லெனின் அவர்கள், ஏகாதிபத்தியமானது சாகும் தருவாயிலிருக்கிறதென்றும் அது முதலாளித்துவத்தின் அழுகிய நிலையென்றும் அதன் விளைவாக இச்சகாப்தமானது பாட்டாளி வர்க்க புரட்சியின் சகாப்தமென விளக்கினார். இத்தகைய முதலாளித்துவமானது இன்று என்றுமில்லா நெருக்கடியினை சந்தித்துக் கொண்டு அது உண்மையில் மரணப்படுக்கையில் இருக்கின்றது. அது கடும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினை தோற்றுவித்திருப்பது மட்டுமின்றி, தத்தம் நாடுகளின் சமூகக் கட்டமைப்பில் பேரழிவினை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. ஒரே வார்த்தையில் கூறுவதனால், முதலாளித்துவமானது இன்று மனித வாழ்க்கையை தாங்கவொனாததாக ஆக்கியிருக்கிறது. விஞ்ஞான சோசலிசத்தின் முன்னோடியான மாபெரும் காரல் மார்க்ஸ் அவர்கள் முன்னறிவித்ததை நிரூபிக்கும் விதமாக முதலாளித்துவம் என்றழைக்கப்படும் சந்தைப் பொருளாதாரமானது இன்று தீர்க்கவியலாத, எப்போதும் அதிகரித்துவரும் சந்தை நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் தலைவனாக இருக்கும் அமெரிக்கா துவங்கி உலகின் அனைத்து ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிலும் இதே காட்சிதான். ஆயிரக்கணக்கில் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன, லட்சக்கணக்கில் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கின்றனர், வேலையற்றோர் சதவீதம் தினசரி உயர்ந்துகொண்டிருக்கின்றது, தாங்கவொணா வறுமை, உணவின்மை மருத்துவ வசதியின்மை இவையாவும் லட்சக்கணக்கானவர்களை சாவிற்குத் தள்ளிக்கொண்டிருக்கின்றது. வாழ்க்கைச்சுமையினை தாங்கமுடியாமல், மக்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர். விலைவாசி உயர்வு, பணவீக்கம் மற்றும் வரிஉயர்வு ஆகிய தாக்குதல்களிலிருந்து எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை.

முதலாளித்துவ நாடுகளில் தேர்தல் என்பது முதலாளித்துவவாதிகளால் கேலிக்கூத்தாக மாற்றப்பட்டு சுதந்திரம்–சமத்துவம்– சகோதரத்துவம் மற்றும் ஜனநாயக பதாகைகள் நீண்ட காலத்திற்கு முன்பாகவே தூக்கியெறியப்பட்டுவிட்டது. பாசிசமானது ஒவ்வொரு வளர்ச்சியடைந்த, வளர்ச்சி குன்றிய முதலாளித்துவ நாட்டிலும் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக ஆகிவிட்டது; வேறுபாடு என்பது அதன் அளவு மற்றும் வடிவத்தில் மட்டுமே காணப்படுகிறது. பலகட்சி ஜனநாயகம் என்பது இருகட்சி ஜனநாயகமாக மாற்றப்பட்டுவிட்டது. அங்கெல்லாம் தேர்தல்களில் மக்கள் தீர்ப்பு எனும் பெயரில் பணபலத்தின், அதாவது முதலாளித்துவ சக்தியின் தீர்ப்பே உண்மையில் கட்டுப்படுத்துகிறது. பெயரளவிலான அத்தகைய தேர்தல்கள் மூலம் எக்கட்சியானது அதாவது எந்த சேவகன் அரசாங்கத்தை அமைத்திட வேண்டுமென்றும், எவர் எதிர்கட்சியாக அமரவேண்டுமென்றும் முதலாளித்துவ வர்க்கம் தீர்மானிக்கின்றது. இத்தகைய தேர்தல் கேலிக்கூத்துக்கள் மூலம் முதலாளித்துவ வர்க்கம் அவர்கள் விரும்பும் நம்பிக்கைக்குரிய சேவகர்களை நியமித்தும், மீண்டும் நியமித்தும் மற்றும் அவர்களை மாற்றியும் வருகின்றது.

இவையாவும் முதலாளித்துவ ஜனநாயகம் பாசிச எதேச்சைதிகாரமாக மாறிவிட்டது என்பதையே காண்பிக்கின்றது. பாசிசமானது மனித இனத்தின் மிக மோசமான எதிரியாகும். அது மக்களிடமிருக்கும் நன்மதிப்புக்கள், ஒழுக்கம் மற்றும் அறநெறி ஆகியனவற்றை கொன்றுவிடுகின்றது. இவ்வாறு அது மனிதர்களை மனிதத்தன்மையற்றவர்களாக்கி, சிந்தனை மற்றும் காரண காரணமறியும் தன்மையை அழித்தொழித்து சமுதாயத்தைப்பற்றிய எந்த உணர்வும் அற்றவர்களாக, உற்றார் உறவினர்களுக்குக்கூட எதுவும் செய்யாத, எவ்வித மனித உணர்ச்சிகளுமற்ற இயந்திர மனிதர்களாக அவர்களை மாற்றிவிடுகிறது. தனிநபர்வாதம் எவ்வாறு பெருகியிருக்கிறதென்பதையும், எவ்வாறு தன்னலவாதம் மற்றும் நுகர்வு கலாச்சாரம் (Consumerism) மனித வாழ்க்கை முடமாக்கியுள்ளது என்பதையும் மேலும் எவ்வாறு இனிமையான சமூக மற்றும் குடும்ப உறவுகள் சுக்கு நூறாக்கபட்டுள்ளது என்பதையும் இன்று நாம் பார்க்கின்றோம். பெற்றோர்கள், வயது முதிர்ந்தவர்கள் அலட்சியப் படுத்தப்படுகின்றனர்.

பெண்களின் கௌரவம் பாழ்படுத்தப்படுகிறது. பெண்களை கேலி செய்தல், பெண்கள் கடத்தப்படுதல், கற்பழிக்கப்படுதல், கூட்டாக கற்பழித்தல் மற்றும் பெண்களை கொலை செய்தல் ஆகியன சமுதாயத்தில் அன்றாட நிகழ்வாகிவிட்டது. கடுமையான வறுமையால், பெண்கள், இளம்பருவப் பெண்கள் மற்றும் வயது வராத பெண்களும்கூட விபச்சாரச் சந்தையில் ஒரு விற்பனைப் பொருளாக தங்களையே விற்றிட நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றனர். முதலாளித்துவம் அதன் உதய காலத்தில் மறுமலர்ச்சி சிந்தனைகளால், அறிவாற்றலின் ஒளிர்மிகு வீச்சினால், உயர்ந்த ஒழுக்கநெறி மற்றும் மனித நன்மதிப்புகளால் தேசங்களை விழித்தெழ வைத்தது. அத்தகைய முதலாளித்துவம் இன்று மரணப் படுக்கையில் வீழ்ந்து, மனித நாகரிகத்தின் மீது முழுமையான இருளை படரவிட்டிருக்கின்றது.

மதத்தின் அடிப்படையிலான முடியாட்சியை ஒழித்துகட்டுவதற்காக முதலாளித்துவமானது ஒரு காலத்தில் விஞ்ஞானபூர்வ காரணமறியும் தன்மை, மதசார்பின்மை மற்றும் மனிதாபிமானம் ஆகிய வற்றிற்காக முன்னின்றது. அதே முதலாளித்துவம் இன்று மக்களின் ஜனநாயக இயக்கங்களையும் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டங்களையும் புரட்சிகர இயக்கங்களையும் நசுக்குவதற்காக வெறியுணர்வு, மத அடிப்படைவாதத்தை தோண்டியெடுத்து பரப்பிவருகின்றது.

ஆனால் தோழர்களே, இந்த இருள்சூழ்ந்த காட்சி நிரந்தரமான ஒன்றல்ல. ஆங்கே புதிதோர் ஒளிக்கீற்றும் தென்படுகிறது. பல நாடுகளில் சுரண்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் இப்போது கோபத்திலும் கிளர்ச்சியிலும் வெடித்தெழுவதைப் பார்த்திட முடிகிறது. வளர்ச்சி குன்றிய முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளில் மட்டுமின்றி அமெரிக்கா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளிலும்கூட மக்களின் போராட்டங்கள் ஏகாதிபத்தியம்–முதலாளித்துவத்தின் அடித்தளத்தை ஆட்டம் கொள்ள வைத்துக்கொண்டிருக்கின்றது. அது வெடித்தெழுவதற்கு முன்னர், 'வால் ஸ்ட்ரீட்டை கைப்பற்றுங்கள்' எனும் போராட்டம் நிகழுமென எவராவது நினைத்திருக்க முடியுமா? உழைப்பாளர்கள் மற்றும் பொது வேலைநிறுத்தங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஐரோப்பா முழுமையும் இவ்வளவு சீக்கிரம் நடைபெறுமென்றும் 'முதலாளித்துவம் ஒழிக', 'உலகமயமாக்கம் ஒழிக', 'அவர்கள் 1 சதவீதம்–நாங்கள் 99 சதவீதம்' என்ற முழக்கங்கள் எழுப்பப்படுமென்றும் எவரும் நினைத்துப்பார்த்திடமுடியவில்லை. அடுத்து வரவிருப்பது தவிர்க்கவியலாமல் சோசலிசப் புரட்சியை கட்டுவதற்கான அழைப்பாகத்தான் இருக்கும். ஆக, அனைத்து நாடுகளிலும் புரட்சிக்கான புறச்சூழ்நிலை கனிந்தேயிருக்கின்றது. அகச்சூழ்நிலை அதற்கேற்ப இன்னும் தயாராகவில்லை, அதாவது உண்மையான மற்றும் பலம் பொருந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமையும் தயாராகவில்லை.

தொடர்ச்சி 4ம் பக்கம்

## 130வது வரலாற்றுச் சிறப்புமிக்க மே தினம்




மே 1, 2016 அன்று 130வது மே தினப் பொதுக்கூட்டம் சென்னை, கொருக்குப்பேட்டையில் நடைபெற்றது. தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்.

# கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான்-யின் 9வது மாநாட்டிற்கு தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் அனுப்பிய செய்தி...

3ம் பக்கத் தொடர்ச்சி

ஏகாதிபத்தியம்–முதலாளித்துவமானது இன்றைய சாகும் தருவாயில் தனது வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள ஒருபுறம் வரலாற்றின் மத்தியகாலத்திய சிந்தனையிலும் இருளிலும் பிரிவினைவாத மத அடிப்படைவாதத்திலும் மக்கள் மனதை மூழ்கடிக்கவும் தூண்டிவிடப்படும் மதவாத–இனவாத குறுகிய ஜாதீய வெறுப்புணர்வில் அவர்களை கட்டிப்போட்டிடவும் முயற்சிக்கின்றது. மற்றொருபுறம் அமைதியை நிலைநாட்டுகிறோம், சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் இன்னும் பல வகைகளிலும் ஏகாதிபத்தியமானது பிற சுதந்திர நாடுகளில் ஊடுருவி அவைகளை கைப்பற்றி அந்நாடுகளில் தனது கூலியாட்களை நியமித்து அவர்கள் உதவியுடன் உள்நாட்டு மற்றும் வட்டாரப் போர்த்தீயை தூண்டிவிட்டு அதன் மூலம் தங்களது ஆயுதங்களை விற்பதற்கான புதிய புதிய ஆயுதச்சந்தையை உருவாக்கிக்கொண்டி ருக்கின்றது. அதன் உடனடி விளைவாகத்தான் தஞ்சம் கோரி ஐரோப்பாவில் அகதிகள் உட்புகுந்தனர். அதில் ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வயதானவர்களும் பெருந்துயருக் குள்ளானார்கள். நிலைமை இவ்வாறு இருப்பினும் மக்கள் மாற்றத்தை விரும்பி, எதிர்த்திட ஆவல் கொண்டு, போராடிட வெளிவந்திருக்கின்றனர் என நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஆனால் சரியான தலைமையில்லாமல் போராடுகின்றனர். இதன் விளைவாக அலையலையாக எதிர்ப்புப் போராட்டங்கள் சில சமயங்களில் உதிக்கின்றன. அதன் பின்பு அவை தணிந்துபோய்விடுகின்றன. இது மீண்டும் மீண்டும் நிகழ்கின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் பலம்பொருந்திய பாட்டாளிவர்க்க புரட்சிகர கட்சியானது அங்கு அமைவதுதான் இத்தருணத்தின் தலையாய தேவையாயிருக்கின்றது. சோவியத் சோசலிசப் புரட்சி ஏற்படுத்திய புதிய சகாப்தம், இரண்டாம் உலகப் போருக்குப் பின் முதலாளித்துவத்திற்கு இணையான சோசலிச அமைப்பு உருவானது மற்றும் உலகம் தழுவிய கம்யூனிச மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் எழுந்தது ஆகியன மனித நாகரிகத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு ஏற்றதோர் சூழ்நிலைமைக்கு இட்டுச்சென்றது என்பது உண்மையே. ஆனால் எதிர்ப்புரட்சியினால் சோசலிசம் சிதைக்கப் பட்டதன் காரணமாக நிலைமை முழுவதுமாக மாறிவிட்டது. ஆனால் இது மார்க்சியவாதிகளை சோர்வடையச் செய்திட முடியாது.

கடவுள் அனுப்பிய மீட்பர்கள் என தங்களை பறைசாற்றிக்கொள்ளும் மத போதகர்கள் இறுதி வெற்றி பெருவதற்குமுன் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மாறி மாறி வெற்றிகளையும் தோல்விகளையும் கடக்க வேண்டியிருந்தது. மறுமலர்ச்சி காலம் துவங்கிய முதலாளித்துவ ஜனநாயக புரட்சியானது வெற்றியையடைய முன்னூறு வருடங்களுக்கும் மேலாக போராடிட வேண்டியிருந்தது. ஆனால் இப்போராட்டங்கள் யாவும், ஒருவகை வடிவத்தினாலான சுரண்டல் வர்க்க ஆட்சியை அகற்றிவிட்டு அதனிடத்தில் மற்றொரு வடிவத்தினாலான சுரண்டல் வர்க்க ஆட்சியை அமைத்திடுவதற்காக நடைபெற்றதால் மனிதனை மனிதன் சுரண்டும் போக்கிற்கு ஓர் முடிவு கட்டிட முடியவில்லை. ஆனால் சோசலிசப் புரட்சியானது ஆயிரமாயிரம் ஆண்டுகளாயிருந்த பழைய சமூக அமைப்பின் சுரண்டல் அடித்தளத்தில் ஓர் அடிப்படை மாற்றத்தை கொண்டுவந்தது. இப்பின்னணியில் ஆராய்ந்து பார்த்தால், 70 அல்லது 80 ஆண்டுகளேயான சோசலிசத்தின் சக்தியும் பலமும், அதுவும் முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் எல்லா திசைகளிலும் சூழ்ந்திருக் கையில் அதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவியலாத ஒன்றாகும்.

நீண்ட காலத்திற்கு முன்பாகவே மார்க்சிய ஆசான்கள், சோசலிசம் ஒருமுறை நிறுவப் பட்டதனால் அது கடைசிவரை நிலைத்திருக்கும் என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லையென எச்சரிக்கை விடுத்துள்ளனர். மாறாக, அது முறையாக பாதுகாக்கப்படவில்லையெனில் அது வீழ்ந்துவிடலாம் என்றனர். சோசலிச மற்றும் பிற நாடுகளின் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குள் திருப்தியடைந்து அகமகிழ்வு கொண்டு இவ்வெச் சரிக்கைக்கு உரிய முக்கியத்துவம் தாராமல் அதன் பேரழிவிற்கு இவ்வாறாக அவர்கள் வழிவகுத்தனர். மாபெரும் மார்க்ஸ் அவர்கள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமானது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்தை அடைவதற்கிடையிலான ஒரு மாற்றுக்கட்டமென கூறினார். இதன் பொருள் தலைமை சரியான பாதையை காட்டினால் சமுதாயமானது சோசலிசத்திலிருந்து கம்யூனி சத்திற்கு சென்றடையும். இல்லையெனில் முதலாளித்துவம் திரும்பவும் வந்துவிடும் என்ப தாகும். மாபெரும் லெனின் அவர்கள், புரட்சியை நிறைவேற்றுவது எளிது எனவும் அதனைப் பாதுகாப்பது கடினம் என்றும் கூறினார். புரட்சிக்குப் பின்னர் தோற்கடிக்கப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தின் பலமானது முன்பிருந்ததைவிட பத்து மடங்கு அதிகரிக்கும் என்றார். மாபெரும் ஸ்டாலின் அவர்கள், சோசலிசம் முன்னேற, முன்னேற வர்க்கப் போராட்டங்கள் கூர்மையடையும் என்றார். அவர் மறைவதற்கு முன்னர், ஸ்டாலின் அவர்கள் சிபிஎஸ்யுவின் 19வது கட்சி மாநாட்டில், சோசலிச தத்துவார்த்த போராட்டங்களை அலட்சியம் செய்வது முதலாளித்துவ செல்வாக்கு வளர் வதற்கும் எதிர்ப்புரட்சியாளர்கள் பலம் பெருவதற்கும் உதவிபுரிகின்றது என எச்சரிக்கை விடுத்தார். மாபெரும் மாசேதுங் அவர்கள் சோவியத் யூனியனில் ஏற்பட்டு நிகழ்வுகளை வேதனையுடன் கண்ணுற்று சீனாவை பாதுகாத்திட பிரம்மாண்டமான பாட்டாளி வர்க்க கலாச்சாரப்புரட்சியை நடத்தினார்.

*1948*ல் எங்களது கட்சியை துவக்கியபோது, பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் தலைவராகிய தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சர்வதேசிய கம்யூனிச இயக்கம் புகழின் உச்சியிலிருந்த சமயம் சுயவிமர்சனத்தின் அடிப்படையில் சர்வதேசிய கம்யூனிஸ்ட் தலைமைக்கு முழுமையான மதிப் பளித்து, கம்யூனிச இயக்கத்தினுள் சிந்தனையில் இயக்கவியல் நடைமுறைக்குப் பதிலாக எந்திர கதியிலான நடைமுறைப்போக்கு மேலோங்கி தலைமைக்கு கண்மூடித்தனமாக கீழ்ப்படியும் போக்கு இருப்பது குறித்து எச்சரிக்கை விடுத்தார். இது நடந்ததன் காரணம், லெனின் அவர்களது காலத்திற்குப்பின்னர் விஞ்ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு இணையாகவும், எதிர்கொண்ட புதிய புதிய பிரச்சினைகளை முன்னிட்டு மார்க்சிசத்திற்கு தேவையான வளர்ச்சியானது செய்யப்படவில்லை என்பதாலும் சித்தாந்தப் போராட்டங்கள்கூட அலட்சியம் செய்யப்பட்டதாலும்தானாகும்.

சோவியத் யூனியனில் அரசியல், பொருளாதாரம், அறிவாதாரத்துறை மற்றும் தனிநபர் உடைமையை ஒழிப்பதில் மிகப்பெரும் முன்னேற்றம் அடைந் திருந்தாலும், அதன் மேற்கட்டுமானத்தில் தனிச் சொத்து மனப்பான்மை இருந்துகொண்டிருந்தது. அதாவது, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் முதலாளித்துவ தனிநபர்வாதத்தின் தாக்கம் அங்கே மேலோங்கியிருந்தது என்பதையும் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். அதனால்தான் அவர் பூர்ஷ்வா மனிதாபிமான அறநெறியொழுக்க தரமானது, அதாவது “புரட்சியின் நலனே முதன்மையானது, சுயநலன் என்பது இரண்டாம் பட்சமே” என்பது இனிமேலும் உதவாது என்றும் சோவியத் நாடுகளில் சோசலிசத்தை பாதுகாத்திடவும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் புரட்சியினை நிறை வேற்றிடவும் புதியதோர் பாட்டாளிவர்க்க அறநெறி யொழுக்கம் தேவைப்படுகிறதென்றும், அதாவது ஒருவர் தன்னை தனிநபர்வாதத்திலிருந்து முழுமையாக விடுவித்துக்கொண்டு புரட்சியின் தேவைக்காக உழைக்கும் வர்க்கம், கட்சி மற்றும் புரட்சியுடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு மகிழ்ச்சியாகவும் எவ்வித நிபந்தனையுமின்றியும் ஒப்படைத்திடுவது இன்றியமையாததெனக் கூறினார். சோவியத் யூனியனின் பல்வேறு களங்களில் வியக்கத்தக்க போராட்டம் இருந்தாலும், அதன் மேற்கட்டுமானத்தில் தேவையான வர்க்கப் போராட்டங்கள் நடத்தப்படவில்லையென்றும் மேலும் எதிர்ப்புரட்சியானது பிரதானமாக இந்த மேற்கட்டுமானத்தில் ஏற்பட்ட பலவீனத்திலிருந்து தான் தனது பலத்தினை பெருக்கிக்கொண்டதென அவர் மேலும் கூறினார். சிபிஎஸ்யுவின் 20வது மாநாட்டிற்குப்பின், தனிநபர் வழிபாட்டினை எதிர்த்துப்போராடுகிறோம் என்ற பெயரில் குருச்சேவ் மாபெரும் ஸ்டாலினை, லெனினிசத்தின் அத்தாரிடியை சிறுமைப்படுத்திய விதமானது இறுதியில் லெனினிசத்தையே குறைத்து மதிப்பிட்டு அது திருத்தல்வாதம் மற்றும் எதிர்ப்புரட்சிக்கான மடைக்கதவுகளைத் திறந்துவிடுமென அவர் எச்சரித்தார். யதார்த்தமாக உண்மையில் இதுதான் நிகழ்ந்தது.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுகளும் உழைக்கும் வர்க்கமும் உரிய நேரத்தில் இவ் வபாயத்தினை புரிந்துகொண்டு எதிர்த்துப் போராடாததன் காரணம் அவர்களே தனிநபர் வாதத்திற்கு பலியாகிப்போனதும் அவர்களது சித்தாந்தம், அறநெறியொழுக்கம் குறைவாக விருந்ததாலும் அவர்கள் தலைமையிடம் கண்மூடித்தனமான பற்றுகொண்டிருந்ததாலுமே யாகும்.

இது உண்மையில் வருத்தமான ஒன்றாகும். ஆனால், உண்மையான மார்க்சியவாதிகளாக அதிலிருந்து படிப்பினைகளை எடுத்துக்கொண்டு முன்னேறிச்செல்ல வேண்டும். பாரிஸ் கம்யூன் தோல்வியிலிருந்து, பூர்ஷ்வாக்களை ஆட்சியிலிருந்து அகற்றிட இது போதுமானதாகாது என உணர்ந்த மார்க்ஸ் பழைய பூர்ஷ்வா அரசை அழித் தொழித்துவிட்டு புதிய பாட்டாளிவர்க்க அரசை நிறுவிடவேண்டும் எனும் படிப்பினையை எடுத்துக்கொண்டார். இப்படிப்பினையைத்தான் லெனின் அவர்கள் சோவியத் புரட்சியின்போது பிரயோகித்தார்.

எதிர்கால சோசலிசத்தில், பொருளாதார மற்றும் அரசியல் களங்களில் புரட்சியை நிறைவேற்று வதுடன் நாம் நின்றுவிட முடியாது. முதலாளித் துவத்தை வேரோடொழித்திட, தனிநபர்வாதம் மற்றும் தனிச்சொத்து மனப்பான்மையை சிந்தனைத்துறையில் அகற்றிட தளர்வற்ற வர்க்கப் போராட்டத்தினை நாம் நடத்திட வேண்டும். அனுபவத்தினடிப்படையிலும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் மற்றும் மாசேதுங் ஆகியோர் போதனைகளின் வழிகாட்டலிலும் பல்வேறு நாடுகளிலுள்ள பாட்டாளிவர்க்கமானது புரட்சியை நிறைவேற்றும்.

எங்களது இந்திய நாட்டில் முதலாளித்துவ மானது ஏற்கனவே ஏகாதிபத்திய குணாம்சத்தை அடைந்து, அமெரிக்காவுடன் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டிருப்பது மட்டுமின்றி அமெரிக்காவுடனான போர்முறை இராணுவ கூட்டுப் பங்காளியாக இணையுமளவிற்குச் சென்றுள்ளது. தெற்காசிய மற்றும் மத்தியக் கிழக்கில் இந்தியா ஒரு வல்லரசாக தோன்றி யுள்ளது. எங்களது நாட்டிற்குள் நடைபெறும் ஈவிரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டல் மற்றும் அடக்குமுறைக்கெதிராக, மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளால் வழிநடத்தப்படும் எமது கட்சியானது முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிச புரட்சியை கொண்டுவரும் இறுதி இலக்கை நோக்கி வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களைக் கட்டி வருகிறது.

பாட்டளிவர்க்க சர்வதேசியவாதியாக, எங்களது சில சிந்தனைகளையும் அனுபவங்களையும் உங்கள் முன்னர் வைக்கின்றோம். உங்களது சிந்தனைகள் மற்றும் அனுபவங்கள் எங்களை வளர்த்துக் கொள்ள உதவிபுரியும் என்றும் நம்புகின்றோம். உங்கள் கட்சி மாநாடு முழு வெற்றிபெற வாழ்த்துகின்றோம். புரட்சிகர விஞ்ஞானமான மார்க்சிசம்–லெனினிசத்தால் உறுதி பெற்று பாகிஸ்தானிலுள்ள சுரண்டப்படும் வர்க்கமானது கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் பாகிஸ்தான் தலைமையில் எழுந்து நின்று வர்க்க, வெகுஜன இயக்கங்களை கட்டியெழுப்பி வெற்றிகரமான முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப்புரட்சியை துரிதப்படுத்துமென நாங்கள் நம்புகின்றோம்.

*மார்க்சிசம்–லெனினிசம் நீடூழி வாழ்க !*

*பாட்டாளிவர்க்க சர்வதேசியம் நீடூழி வாழ்க !*

புரட்சிகர வாழ்த்துக்களுடன்

**பிரவாஸ் கோஷ்**

பொதுச்செயலாளர்

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

# பாராளுமன்ற தேர்தல்கள் – டொனால்டு டிரம்பும் மோடியும்

பூர்ஷ்வா பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு புனிதமான அங்கம் என்றவகையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. தங்களுடைய அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கும் உரிமையை மக்களுக்கு வழங்குவதாக அது பறைசாற்றிக்கொள்கிறது. இறுதியாக, யதார்த்தத்தில் என்ன நடக்கிறது? விருப்பத்திற்கேற்ப சுதந்திரமாக தங்களுடைய வாக்கை செலுத்த மக்களால் எவ்வளவுதூரம் முடிகிறது? இச்செயல் முறைப் போக்கில் தங்களுடைய விருப்பத்திற்கேற்ற ஒரு அரசாங்கத்தை அமைக்க மக்களால் எவ்வளவு தூரம் முடிகிறது என்ற பதிலளிக்கப்படாமலிருக்கும் கேள்விகள் ஒருபுறம். மாறாக, ஜனநாயகம் எனும் பெயரில் இன்றைய சாகும்தருவாயிலுள்ள முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்தின் சீரழிவைத் தான் தேர்தல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகின் பிரதிநிதிகளாகத் திகழும் யுஎஸ்ஏ (அமெரிக்கா)வும் இந்தியாவும் உலகின் மிகப்பெரிய ஜனநாயகங்கள் என்று புகழப்படுகின்றன. அவ்வாறே, இவ்விரண்டு நாடுகளின் பாராளுமன்ற தேர்தல்களும் சர்வதேச அரசியலில் மிகப்பெரிய முக்கியத்துவத்தையும் பெறுகின்றன. மேலும் தேர்தல்கள் வெறுமனே பூர்ஷ்வா அரசாங்கங்களை மட்டுமே உற்பத்தி செய்யவில்லை. இந்த முழு செயற்முறைப் போக்கிலும், வடிவமும் வழியும் வழிமுறையும் பண ஈடுபாடும் எழுப்பப்படும் பிரச்சினைகளும் இச்செயற்முறைப் போக்கின்மீது தாக்கத்தை செலுத்துகின்றன. இரண்டு நாடுகளும் தனித்தனி நாடுகளே. இருந்தபோதிலும், ஒரு பொதுத் தன்மையைப் பெற்றிருப்பதனால் அது ஆய்வுற்கு உட்படுத்தப்படுகிறது.

யுஎஸ் அதிபர் தேர்தலுக்கான ஆரம்பகட்ட பிரச்சாரத்தில் எங்கும் பணமே வெள்ளமென பாய்ந்தோடியதை சமீபத்திய சில ஆய்வுகள் வெளிப் படுத்துகின்றன. அரசியல் பிரச்சாரத்தில் நம்பகத் தன்மை இழந்த ஒன்றாக அது இருக்கிறது. மக்கள் வாழ்வில் எரியும் பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான சரியான தீர்வு குறித்தெல்லாம் அப்படியே புறந்தள்ளிவிட்டு, கடுமையான சமூகப் பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான சரியான தீர்வு குறித்தெல்லாம் நயமாக விலக்கிவைக்கப் பட்ட, நன்கு வடிவமைக்கப்பட்ட வலைக்குள் மக்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள். பொய் வாக்குறுதி களும் பொற்காலங்களைத் தரப்போவதாக வெற்று ஆடம்பர வார்த்தை ஜாலங்களுமே மக்களுக்கு தரப்படுகின்றன.

மக்கள் நலனுக்கானது என்றுசொல்லி களத்தில் இருவர் மட்டுமே உள்ளதைப்போன்ற பிரச்சாரம் செய்யப்படுகிறது. கருத்துக்கணிப்புக்கள், மாதிரி சர்வேக்கள் அல்லது பொதுவானவர்களின் நேருக்குநேர் பேட்டிகளின் மூலம் வாக்காளர்களின் நாடி பிடிக்கப்படுகிறது. குறைந்த வருமானம், சம்பள உயர்வின்மை, புலம்பெயர்தல் குறித்த அச்சம், வேலையின்மை, மலிவு உழைப்புக்காக வெளிநாடுகளுக்கு அவுட்சோர்சிங் செய்தல் போன்ற எத்தகைய துன்பத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை அது அடையாளங் கண்டுபிடிக்கிறது. இவையெல்லாம் உண்மையான பிரச்சினைகள். அனைத்தும் எரியும் பிரச்சினைகள். அடுத்து இவையெல்லாம் டிஜிட்டல் தொழில்நுட்ப நிபுணர்களால் வேட்பாளர்கள் பயன்படுத்தக் கூடிய பிரச்சார பொருட் (Subjects)களாக தயார் செய்யப்படுகிறது. லேப்புகளில் தயாரிக்கப்பட்ட புனையப்பட்ட கதைகள், படங்கள், வாக்குறுதிகளைத் தாங்கிய கணிணிமயமாக்கப்பட்ட டிஜிட்டல் திரைகள் நிறைந்த சூழலில் ஒளிபரப்பக்கூடிய பிரச்சாரம் செய்யத்தக்க பேச்சுக்களாக அவை மாற்றப்படுகின்றன. மேலும், ஏகபோகங்களின் தங்குதடையற்ற ஆதரவைப்பெற்று, அவர்களின் கடும் தணிக்கைக்குட்பட்டு இப்பிரச்சாரம் முழுவதும் அவர்களால் கண்காணிக்கப்படுகிறது.

மக்களுடைய எதிர்பார்ப்பு, மனக்குறை குறித்து இப்பிரச்சாரம் எக்காளமிடுகிறது. தேர்தல் செயல் முறைமூலம் தீர்வுகாண அவர்களை நச்சரித்து மன்றாடுகிறது. அவர்கள் பிரச்சினைகள் அனைத்தை யும் தீர்க்கும் சர்வவல்லமைவாய்ந்த ஒரு மிகப் பெரிய மனிதர் இச்செயல்முறையில் செயற்கையாக உருவாக்கப்படுகிறார். ஏகபோகங்களாலும் அவர் களுடைய ஸ்தாபனங்களாலும் முன்னமே தீர்மானிக்கப்பட்ட முடிவை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தேர்தல்களமானது தயார்செய்யப் படுகிறதென்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விஷயமாகும். மக்களின் சர்வவல்லமை வாய்ந்த இந்த மிகப்பெரிய மனிதர் தேர்தலுக்குப் பின்பு தனக்கு ஆதரவளித்த, தன்னை ஊட்டி வளர்த்தவர்களுக்கு ஆதரவானவராகிவிடுவார். தன் எஜமானர்களான ஏகபோகங்களுக்கும் அவர் களுடைய ஸ்தாபனங்களுக்கும் சேவை செய்வதே அவருடைய ஒரே நோக்கமாக ஆகிவிடும். வாக்குறுதிகளெல்லாம் நிராகரிக்கப்பட்டு, கண்ட கனவெல்லாம் பாழாகி, இருள்சூழ்ந்த நாட்களை எதிர்கொண்டு நிர்க்கதியாய் மக்கள் நிற்பர்.

இந்துப் பின்னணியில்தான் யுஎஸ்ஏவின் அதிபர் பதவிக்கான குடியரசு கட்சி (Rebuplican Party)யின் வேட்பாளராக டொனால்டு J டிரம்ப் வந்திருக்கிறார். 2000 ஆண்டிலும் மிகப்பெரிய பணக்காரரான ரோஸ் பெரோட் என்பவரால் அணிதிரட்டப்பட்ட சுதந்திர சீர்திருத்தக் கட்சி(Reform Party)யின் சார்பாக அவர் அதிபர் பதவிக்கு போட்டியிட்டார். பின்னர் சின்னத்திரையின் ரியாலிட்டி ஷோவில் மூர்க்கத்தனமான பேச்சின்மூலம் பிரபலமானார். வெற்றியின் அமெரிக்க முன்னுதாரணப் புருஷராக தன்னைத்தானே காட்டிக்கொள்ள இம்முறை முயற்சிக்கிறார். ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்யும் டிரம்ப் அமைப்பின் தலைவராகவும் அவர் இருக்கிறார். டிரம்ப் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனத்திற்கும் உரிமையாளராக இருக்கிறார். 4 பில்லியன் டாலரிலிருந்து 10 பில்லியன் டாலர் வரையிலான அபரிதமான சொத்திற்கு அதிபதியாகத் திகழும் அவர், யுஎஸ்ஏவின் அதிபர் பதவிக்கு போட்டியிட முழு தகுதி படைத்தவராகிறார்.

வேட்பாளருக்குரிய தகுதியை உறுதிபடுத்திக் கொள்ள மக்களின் கவலைகளுடன் தன்னை அவர் அடையாளப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறார். யுஎஸ் பொருளாதாரமானது இதற்குமுன்பில்லாத தேக்கம் மற்றும் நெருக்கடியில் மூழ்கியுள்ளது. நாட்டின் ஜிடிபியில் தோராயமாக 13%மானது உயர்மட்டத்திலுள்ள 1%த்தினரிடம் குவிந்துள்ளது. ஏகபோகங்களின் நிதியாட்சியதிகாரமும் அவர் களுடைய முக்கிய கார்ப்பொரேஷன்களின் பருமனும் செல்வாக்கும் வக்கிரத்தனமாக மிகப்பெரிய வடிவ மெடுத்துள்ளது. ஆனால், சாதாரண அமெரிக்க மக்களுக்கோ நாகரீகமான சம்பளத்தை, முன்பு ஏராளமாக அளித்துவந்த தொழிற்சாலை வேலைகள் தற்போது சுருங்கிவிட்டது. வெளிநாடுகளில் குறைவான சம்பளத்தின் காரணமாக விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய வேலைவாய்ப்பும் அவுட் சோர்சிங் மூலமாக அவர்கள் கைநழுவிச் செல்கின்றன. எனவே, யுஎஸ்ஏவின் சாதாரண மக்கள் பணக்கார கார்ப்பொரேஷன்கள் மீது வரி விதிப்பதன்மூலம் செல்வம் மறுவிநியோகம் செய்வதை மட்டுமல்ல, அவுட்சோர்சிங் பணிக்கு ஒரு முற்றுபுள்ளி வைக்கவும் விரும்புகின்றனர்.

தற்போது யுஎஸ்ஏவானது முழுக்கமுழுக்க வெறுக்கக்கூடிய, பலத்தை பிரயோகப்படுத்தக் கூடிய பயங்கர எதிரியாக உலகின் பெரும்பகுதியில் பார்க்கப்படுகிறது. தன் இராணுவ பலத்தைக் கொண்டு தன் பெயரை புதுப்பித்துக்கொள்ள முயலும்போது யுஎஸ்ஏவானது தோல்வி எனும் சதுப்புநிலத்திற்குள் மேலும் புதைந்து கொள்கிறது. தனக்கு சாதமாக்கிக்கொள்ள அது தொட நினைத்த எந்த பிரச்சினையும், அது ஆப்கானிஸ்தான், ஈராக் அல்லது சிரியா அல்லது எங்குவேண்டுமானாலும் இருக்கட்டும் தோல்வியில்தான் முடிந்துள்ளது.

வெளிப்படையான பகட்டு, சுயதிருப்தி கொள்ளும் வக்கிரத்தில் தாராளவாதம், அதீத சுதந்திரம், இரக்கமற்ற வன்முறை, நெறியற்ற மனோபாவம் ஆகிய இவ்வகையான கலாச்சாரமும் இனவாதமும் மதவெறிவாதமும் ஊக்குவிக்கப்பட்டு அமெரிக்க சமுதாயத்தை பீடித்திருப்பது பொதுமக்களை மனவேதனைக்குள்ளாக்கியிருக்கிறது. பெரியபெரிய பேச்சுக்கள் ஒருபுறம், பள்ளிகளிலும் பொதுவிடங் களிலும் துப்பாக்கிச் சூட்டின் களியாட்டம் மறுபுறம். பள்ளிகளில்கூட நிர்வாகங்களின் மிக அருகாமை யிலேயே சில நிர்ப்பந்திக்கப்படும் பாலியல் வக்கிரங்கள் நடைபெறும் செய்திகள் வருகின்றன. மறுபுறம், மக்களின் ஒரு பிரிவினர் பழைமைவாத அணுகுமுறையை ஆழமாகக் கொண்டிருக்கின்றனர், தீவிர இனவாத கண்ணோட்டம் உட்பட, ஆண் பெண் சமத்துவத்தை மறுப்பது, மதவெறிவாதத்தைக் கூட கொண்டிருக்கின்றனர். பெருமைமிக்க பழைய கட்சி (Grand Old Party) என்றழைக்கக்கூடிய குடியரசுக் கட்சி முதலாளித்துவ ஆதரவு கொள்கை களுடன் மத அடிப்படைவாதம், பிறநாடுகளின் பால் தேசிய வெறிவாதத்துடன்கூடிய அணுகு முறையை கைகொள்சிறது. வெள்ளை ஆண்கள் என்றுசொல்லக்கூடிய பெரும்பான்மை கட்சி உறுப்பினர்கள் பெண்கள் மற்றும் சிறுபான்மை யினரின் சிவில் உரிமைகளை வெறுக்கவும் கண்டிக்கவும் செய்கிறார்கள். கட்சியும் அரசாங்கமும் மிகப்பெரிய செல்வந்தர்களாலும் கார்ப்பொரேட் குழுமங்களாலும் நிதியளிக்கப்படுகிறது.

தனது பிரச்சாரத்தின் துவக்கம் முதற்கொண்டே டிரம்ப் மிகவும் வெறித்தனமாக பேசிவருகிறார். 'மீண்டும் அமெரிக்காவை தலைசிறந்ததாக்குங்கள்'

தொடர்ச்சி 6ம் பக்கம்

## வரலாற்றுச் சிறப்புமிக்க ஏப்ரல் 24

# எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 69வது ஸ்தாபகதினம்






ஏப்ரல் 27, 2016 அன்று எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் 69வது ஸ்தாபகதினப் பொதுக்கூட்டம் சென்னை, கொருக்குப்பேட்டையில் நடைபெற்றது. தோழர் சந்திரன், சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார், கூட்டத்தில் கலந்து கொண்டோர்.

# பாராளுமன்ற தேர்தல்கள் – டொனால்டு டிரம்பும் மோடியும்...

5ம் பக்கத் தொடர்ச்சி

என்ற கோஷத்தை அவர் பயன்படுத்திவந்தார். ஐஎஸ் (Islamic State)க்கு எதிராக எரிச்சலுடன் பேசிய அவர், ஒருஅடி முன்சென்று முஸ்லீம்களை தீவிரவாதிகள் என முத்திரை குத்தினார், இடம் பெயரும் முஸ்லீம்கள் யுஎஸ்ஸிற்குள் நுழை வதிலிருந்து தடுக்கப்படவேண்டும் என்று கண்டித்து பேசினார். மசூதிகளை மூடுவதாகவும் முஸ்லீம்கள் குறித்து ஒரு புள்ளிவிபரம் பராமரிக்கவும் இடம்பெயர்ந்த "சட்டவிரோத" புலம்பெயர்ந்தவர் களின் குழந்தைகள் சுற்றிவளைக்கப்படுவார்கள் எனவும் அவர் வாக்குறுதியளித்தார். தொண்டர் களின் மனதை வெல்ல செல்வந்தர்கள், கட்சியின் பெரும்புள்ளிகள், அதிகாரவர்க்கம் ஆகியோரின் வெளிவேஷத்தையும்பற்றி திரும்பத்திரும்ப பேசிக்கொண்டிருந்தார். அணுஆயுத பரவல் தடுப்பிற்கு யுஎஸ் ஆட்சியாளர்கள் அதிகார பூர்வமாக ஆதரவளித்துக்கொண்டிருக்கையில், யுஎஸ்ஸின் கூட்டாளிகளான ஜப்பான், சவுதி அரேபியா, தென் கொரியா ஆகிய நாடுகள் சொந்தமாக அணுஆயுதத்தை வைத்துக்கொண்டு அவர்களை பாதுகாக்கும் சுமையிலிருந்து வாஷிங்டனை விடுவிக்கவேண்டும் என டிரம்ப் கூறுகிறார். இவ்வாறு, பகுத்தறிவுரீதியான எவ்வித ஆய்வுமின்றியும் அரசியல் சித்தாந்த புரிதலெதுவு மின்றியும் விரக்தியதிகரித்த, அமைதியற்ற, பொருளாதார – சமூக ஏற்றத்தாழ்வின் நுகத்தடியில் சிக்கி ஆதரவற்று, ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் அசுத்தத்தையும் மூட சிந்தனைகளின் இடைவிடாத பிரச்சாரத்தையும் சுமந்துகொண்டிருக்கும் அமெரிக்க மக்களிடம் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, அவர்களை பழமைவாதத்திலும் வெறித்தனத்திலும் மூழ்கடிப்பதாகவே டிரம்பின் ஒட்டுமொத்த பிரச்சாரத்தின் பொருளடக்கம் இருந்தது.

இருந்தபோதிலும், ஒரு அதிபர் வேட்பாளருக் குரிய தகுதி அவருக்கு இருக்கிறதா என்ற கேள்வி டிரம்பின் கட்சிக்குள்ளேயே எழுமளவிற்கு அவருடைய அப்பட்டமான ஆவேசமான பிரச்சார மானது சென்றது. ஏகபோகங்களால் கண் காணிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு மக்கள் டிரம்ப்பை ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பதை காலம்தான் சொல்லவேண்டும். அவ்வாறு அவரை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டால் பின் எப்படிப்பட்ட எதிர்காலத்தை நாட்டிற்கும் உலகிற்கும் டிரம்ப் வழங்குவார்? ஆனால் டிரம்ப்பை போன்ற நிகழ்வானது ஏதோ விநோதமானது ஒன்றுமல்ல, தீவிர நெருக்கடிசூழ்ந்த இன்றைய முதலாளித்துவத்தின் மிகச்சரியான நிகழ்வேயாகும்.

யுஎஸ்ஏவில் வெற்றியின் அமெரிக்க முன்னு தாரணமாக டிரம்ப் திகழ்ந்தாரென்றால் பின் இந்திய வெற்றியின் முன்னுதாரணமாக நரேந்திர மோடியும் திகழ்கிறார். தெருவில் தேநீர் விற்பவர் என்ற நிலையிலிருந்து, ஆர்எஸ்எஸ்– பாஜகவுடனும் அதன் இந்துத்துவ கோட்பாட்டுடனும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு, அதன்பின் குஜராத்தின் முதலமைச்சராகி, அதன்பின் இந்த ஒட்டுமொத்த நாட்டையே ஆளும் பிரதம மந்திரிப் பதவியை பிடித்ததில் வெற்றிகண்டவர் அவர். அவருடைய தோற்றத்தின் கதையானது ஒரு ஒப்பீட்டு ஆய்வை நடத்தும் ஆவலைத்தூண்டுகிறது. யுஎஸ்ஏவுடன் சம்பந்தப்பட்டு விளக்கப்பட்ட அனைத்து அம்சங்களும் திரும்பத்திரும்ப வந்தன. ஏராளமான பணம். உண்மையான அரசியல் – சமூக பிரச்சினை கள் அடையாளங் கொள்ளப்பட்டதோ இல்லையோ, அவை அனைத்தும் ஓரங்கட்டப்பட்டன. வளர்ச்சி யையும் பொற்காலங்களையும் கொண்டு வரக்கூடிய சர்வவல்லமை பொருந்திய மாபெரும் மனிதர் என்று டிஜிட்டல்மயமான வடிவமைக்கப்பட்ட பிரச்சாரங்கள் சித்தரித்தன. இத்தகைய பிரச்சாரங் களெல்லாம் அவர்களுடைய எஜமானர்களுக்கு, ஏகபோகங்களுக்கு ஆதரவாகவும் மக்களுக்கு விரோத மாகவும் எவ்வாறு இருந்தன என்பதை தேர்தலுக்குப் பிந்தைய நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

அன்றும் இன்றும் வேலையின்மை, விலைஉயர்வு, குறிப்பாக சமுதாயத்தின் விளிம்புநிலை பிரிவினரின் கடும் வறுமை, பெண்கள் – குழந்தைகள் மற்றுமது போன்ற அம்சங்களில் துயரகரமான மனித வளர்ச்சிக் குறியீடு போன்றவைகளால் இந்தியாவின் பிற மாநிலங்களைப்போலவே குஜராத்தும் மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்த பிரச்சினைகளில் எதை யாவது தீர்க்கும் வாக்குறுதியை அளித்து, மோடி தேர்தல் போட்டியில் இறங்கவில்லை. ஆனால் பணக்காரர்களுக்கும் செல்வச்செழிப்புள்ள மத்தியதர வர்க்கத்தினருக்கும் தாராளமாக சலுகைகளை வாரிவழங்கினார். ஏழை மக்களை மேலும் துன்ப துயரத்தில் ஆழ்த்தினார். இவற்றால் எழுகின்ற கோபம் அடக்கப்படவேண்டியதிருக்கிறது. எனவே, வகுப்புவாத தீய மூட்டிவிட்டு, சிறுபான்மையினருக் கெதிரான கொடூர படுகொலைகளை தூண்டி விட்டார் அவர். பல்வேறு சமூகங்களுக்கிடை யிலிருந்த ஒற்றுமையையும் இணக்கத்தையும் குலைத்து, முதலாளித்துவ அமைப்பிற்கெதிரான மக்களின் ஒன்றுபட்ட இயக்கத்தின்முன்பு ஒரு தடையை எழுப்பினார். எனவே இந்தப் புதிய தலைவரைக் கண்டுபிடித்த எஜமானர்கள் – ஏகபோகங்கள் அவருக்கு ஆதரவையும் ஆசியையும் வழங்கினர். இவ்வாறு மோடி சந்தித்த தேர்தல்கள் வெள்ளமென பணத்தைப் பாய்ச்சியும் நிர்வாகத்தினரின் அப்பட்டமான பாரபட்சத்துடனும் வடிவமைக்கப் பட்டது. ஊடகத்தின் மீதான மோடி மற்றும் அவரது நிர்வாகத்தின் அக்டோபஸ் போன்ற பிடியானது ஊடகத்தின் மீதும் ஜனநாயக நடைமுறைமீதும் ஒரு கறைபடியக்கூடிய வகையில் குஜராத் தேர்தல்களில் கையாளப்பட்ட 'பணம்கொடுக்கப்பட்ட செய்திகள்' (Paid News) எனும் நடைமுறை மிகப்பெரிய அளவில் வடிவமெடுப்பதற்கான பாதைக்கு வழிவகுத்தது என்ற முடிவிற்கு பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியாவே வந்தது. வளர்ச்சி, வளர்ச்சி என்று அவர் எழுப்பிய கோஷத்திற்கு ஆதாரமாக மோசடியான புள்ளி விபரங்கள் தரப்பட்டது. மோடி உரிமை கொண்டாடும் குஜராத்தானது 21 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவின் வேகமான வளர்ச்சியைக் கொண்ட மூன்று மாநிலங்களில் ஒன்றாக இருந்தது. இத்தகைய உரிமைக் கொண்டாடலுக்காகவே 1,06,161 கோடி ரூபாய் முதலீடு ஒரே ஆண்டில் (2005) முன்மொழியப்பட்டது. ஆனால் 74,019 கோடி ரூபாய் மட்டுமே (69 சதவீதம்) முதலீடு செய்யப்பட்டது. அதிலும் 24,998 கோடி ரூபாய்க்கான (23.5 சதவீதம்) திட்டமே செயல்படுத்தப்பட்டதாக தகவலரியும் உரிமை சட்டத்தின்படி தகவல் பெறப்பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடித்தனமான, கட்டுப்படுத்துப் பட்ட, கண்காணிக்கப்பட்ட விபரங்களை அடிப் படையாகக் கொண்டு, தன்னுடைய ஆதரவாளர் களின் துணையோடும் உதவியோடும் மக்களை, குறிப்பாக இளைய தலைமுறையினரை கவர்ந் திழுத்து ஒரு திறம்படைத்த 'வளர்ச்சியின் நாயகன்' என்று தன்னைத்தானே காட்டிக்கொண்டார். பிரதம மந்திரிக்கான போட்டியில் மோடி நிற்கும்போது இந்த உண்மை மேலும் தெளிவானது. உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோகக் குழுமங்கள் மோடியையும் அவரது தலைமையையும் "திறமையான நிர்வாகம் மற்றும் உத்வேகமூட்டும் வளர்ச்சியின் மிகச்சிறந்த இந்திய உதாரணம்" என புகழ்ந்து தள்ளின.

தேசிய அரங்கத்தில், காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ I, II நீண்ட அரசாங்கங்களுக்கெதிராக மக்களிடையே குவிந்த கடும் அதிருப்தியையும் கோபத்தையும் மோடியும் அவரது குழுவும் நன்கு ஆய்வுசெய்தன. யுபிஏவின் மிக நம்பிக்கைக்குரிய பெரிய இடதுசாரி கட்சிகள் மேற்கு வங்கம், கேரளா போன்ற மாநிலங்களில் ஆட்சியிலிருந்துகொண்டு அதே முதலாளித்துவ கொள்கைகளை அமுல்படுத்தி வந்ததன் காரணமாக மக்களின் கடும்கோபத்திற்கு ஆளாகியிருந்தன. எனவே மக்கள் கடும் விரக்தி யுற்றனர். மக்கள் வாழ்வில் பேரழிவைக்கொண்டு வரும் முதலாளித்துவ சுரண்டல் இருந்துவரும் நிலையில், அவர்களுடைய மிச்சமீதமுள்ள வாழ் வாதாரத்தையும் நிலத்தையும் பறிக்கின்ற வெட்கங் கெட்ட கார்ப்பொரேட் ஆதரவு கொள்கைகளின் காரணமாக முடமாகிப்போன இவ்வமைப்பு கடும் சீரழிவைக் கொணர்கிறது. உலகின் வீங்கிக் கொண்டுவரும் பணக்காரர்களை நாடு இன்னும் உருவாக்கிக்கொண்டுதான் இருக்கிறது. இந்தப் பிராந்தியத்திலும், இதைத்தாண்டி உலக அரங்கிலும் வெல்லமுடியாத பொருளாதார – இராணுவ வல்லரசாகஆக இந்திய ஏகாதிபத்தியம் கனவு கொண்டிருந்தது. நிலைமை தங்களுக்கு சாதகமாக இருப்பதைக் கண்டுகொண்ட மோடியும் அவரது குழுவும் தங்கள் எஜமானர்களான ஏகபோகங்களின் ஆசீர்வாதத்துடன் நன்கு வடிவமைக்கப்பட்ட விளம்பர கட்டமைப்பைக்கொண்டு நாட்டு மக்களுக்கு நல்ல நாட்களை (அச்சி தின்) கொண்டுவரப் போவதாக பெரும் பிரச்சாரம் செய்தனர்.

*'மீண்டும் அமெரிக்காவை தலைசிறந்ததாக்குங்கள்'* என்ற பதத்தை டிரம்ப் பயன்படுத்தினார். இந்திய தொழிலதிபர்களுக்காக 'இந்தியாவில் தயாரிப்போம்' என்றும் உலகச் சந்தைக்கு ஏதுவாக இளைய தலை முறையினரை தயார்படுத்துவதற்காக 'திறமையை வளர்ப்போம்' என்ற பதத்தை மோடி கண்டுபிடித்தார். பணம், எப்போதும்போல் வெள்ளமெனப் பாய்ந்தது. ஊடகங்கள் தீவிரமாக அவருக்கு வேலைசெய்தன. நல்ல ஒத்திகை, நன்கு ஊட்டமூட்டப்பட்ட கட்டமைப்பு ஆகிய இவையெல்லாம் இருந்த போதிலும் மோடி அலையானது ஏற்கனவே வெளுக்கத் துவங்கிவிட்டது. அனைத்து வடி வமைப்புக்களும் பெரியபெரிய பேச்சுகளும் இருந்த போதிலும் மோடியும் அவரது பாஜக கட்சியும் மக்களிடம் ஏதாவது மிச்சமீதி இருப்பதையும் அபகரித்துக்கொள்ளக்கூடிய கார்ப்பொரேட் ஆதரவு அரசாங்கத்தை உருவாக்கியிருக்கின்றனர். மக்களை மயக்கத்திலாழ்த்தி, அவர்களை தவறாக வழிநடத்த மோடியும் அவரது அரசாங்கமும் இந்துவெறி அடிப்படைவாத அமைப்பான ஆர்எஸ்எஸ்ஸின் உதவி மற்றும் தூண்டுதலைக் கொண்டு சூழ்ச்சி கரமாகவும் அவர்களுடைய இந்துத்துவா அஜெண்டாவின் விழிப்புடன்கூடிய அமலாக் கத்தையும் நிறைவேற்றிவருகிறார்கள். பண்டைய இந்தியப் பெருமை எனும் பொய்மையை உயர்த்திப் பிடித்தும் மதிப்புக்களின் அடிப்படையிலான சமுதாயத்தைக் கொண்டுவருகிறோம் எனும் பெயரில் சமுதாயத்தில் மிச்சமீதி இருக்கின்ற மதசார்பற்ற ஜனநாயகத்தையும் அடித்துநொறுக்க முயற்சிக்கிறார்கள். சில மாநில தேர்தல்களுக்கு முன்பு அவர்களே உருவாக்கும் சில பிரச்சினை களை வைத்துக்கொண்டு, தேசியவெறிவாதம், தீவிரவாதம் அல்லது ஏதாவதொன்றைவைத்து கொடூரமான வகுப்புவாத கலவரங்களில் ஈடுபடுகிறார்கள்.

முதலாளித்துவம் என்ற அக்டோபஸானது மக்களின் ரத்தத்தை மட்டும் உறிஞ்சுவதில்லை, அதன் எண்ணற்ற விஷக்கொடுக்குகள் ஊடகங் களையும் கட்டுப்படுத்துகின்றன. மிகவும் புகழ்ந் துரைக்கக்கூடிய புனிதமான தேர்தல்களென்பது வழிநடத்தப்பட்ட மக்களின் அங்கீகாரத்துடன் பாராளுமன்ற ஜனநாயக முகத்திரையில்கீழ் இந்துப் பேரழிவு அமைப்பைக் காப்பதற்கான எளிய வழிகளாகும். சுருக்கமானதாவும் பகுதியாகவிருந்த போதிலும், எப்படிப்பட்ட, என்ன வழிமுறைகளைக் கொண்டு, என்ன நோக்கத்திற்காக, எதை உற்பத்தி செய்ய தேர்தல்கள் நடத்தப்படுகின்றன என்பதை இந்த இரண்டு உதாரணங்களே விளக்கும். ஜனநாயகமென்பது முகத்திரையாகும்; அதன் நோக்கம்: மக்கள்மீது ஒன்றுகுவிக்கப்பட்ட முழுமையான பொருளாதார–அரசியல் அதிகாரத்தை நிறுவுவதாகும். மக்களை ஏமாற்றி, அடித்துநொறுக்கி, ஒற்றுமையை குலைத்து அதன்மூலம் இந்த அமைப்பிற்கெதிராக உறுதியுடன் நிற்கும் தன்மையை வீரியமிழக்கச் செய்வதாகும். பாசிசத்தில் இதைத் தான் நாம் காண்கிறோம். தற்போதைய முதலாளித் துவத்தில் ஆயிரம் வழிகளுக்கு மத்தியில் பாசிசத்திற்கான களத்தை தயார்செய்யும் ஒரு வழியே தேர்தல்களாகும்.

**மார்ச் 23**
**தியாகி**
**பகத்சிங்**
**நினைவு தின**
**கூட்டம்**
**மதுரையில்**
**நடைபெற்றது**



# உருது எழுத்தாளர்களை உறுதிமொழி அளிக்கச்சொல்லும் கொடிய பாசிசத் திட்டம்

பாஜக தலையிலான மத்திய அரசாங்கம் ஒரு புதிய தாக்குதல் திட்டத்தை துவக்கியிருக்கிறது. தன்னாட்சி பெற்றது என்று சொல்லக்கூடிய ஆனால் ஸ்மிருதி இராணியின் தலைமையிலான மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்படக்கூடிய உருது மொழி மேம்பாட்டிற்கான தேசிய கவுன்சிலு (NCPUL)க்கு உருது ஆசிரியர்களால் பூர்த்திசெய்யப்படக்கூடிய ஒரு உறுதிமொழிப் படிவம் அனுப்பப்பட்டுள்ளது. அப்படிவமானது NCPULலின் நிதியுதவி திட்டத்தின்கீழ் மொத்த கொள்முதலுக்கான அங்கீகாரத்திற்கான படிவத்தில் நிதியுதவி கோருபவர்கள் “இந்திய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கெதிராகவோ, தேசிய நலனுக்கு எதிராகவோ எதுவும் இடம்பெறவில்லை” என்பதை ஐயத்திற்கிடமின்றி தெளிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்துகிறது. ஏதாவது உரிமைமீறல் இருக்கும் பட்சத்தில் ஆசிரியருக்கெதிராக NCPULலால் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அளிக்கப்பட்ட உதவித்தொகை திரும்பப்பெறப்படுமெனவும் அப்படிவம் எச்சரிக்கிறது. இதற்கிடையில் இரண்டு சாட்சி கையெழுத்தை ஆசிரியர் பெற வேண்டுமென இந்தப்படிவம் கோருவதானது ஆசிரியரின் சுயகௌரவத்திற்கும் நேர்மைக்கும் விடப்பட்ட அப்பட்டமான அவமரியாதையாகும்.

இது அப்பட்டமான மிரட்டலாகும். பல்வேறு இலக்கிய வட்டாரங்களிடமிருந்தும் அமைப்புக்களிடமிருந்தும் கடும்கண்டனங்கள் வந்திருப்பது இயற்கையே. அரசியல்ரீதியாக நியமிக்கப்பட்ட சமீபத்திய NCPULலின் இயக்குனர், “ஒரு எழுத்தாளர் அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி பெறவிரும்புகிறார் என்றால் பின் அவர் அரசாங்கத்திற்கு எதிரான எந்த கருத்தையும் எழுதக்கூடாது” என்று கூறுகிறார். அப்பட்டமான அதிகாரத்துவ பாணியில் அவர் மேலும், “NCPUL ஒரு அரசுஅமைப்பு என்பதாலும் அதன் அலுவலர்கள் அரசு ஊழியர்கள் என்பதாலும் இயற்கையாகவே அவர்கள் அரசாங்கத்தை பாதுகாக்க செய்வர்” என்கிறார்.

இவ்வாறு அவர் கூறியதன்மூலம் பல்வேறு கேள்விகளை கிளப்பிவிட்டிருக்கிறார். நாம் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு ஜனநாயக நாடில்லையா? அரசாங்கம் தன்னை ஜனநாயகத்துடன் அடையாளப் படுத்திக் கொள்கிறதா? அல்லது சர்வாதிகார பாசிசத்துடன் அடையாளப்படுத்திக் கொள்கிறதா? ஜனநாயகத்தில் ஜாதி, மதம், மொழி, இனம் கடந்து அனைத்து மக்களும் சமமான உரிமைகளை அனுபவிக்கிறார்களா இல்லையா? அந்த ஜனநாயக உரிமைகளென்பது சுதந்திரமாக கருத்துகூறும் உரிமையையும் உள்ளடக்கி இருக்கிறதா இல்லையா? எந்தவொரு ஜனநாயக அமைப்பிலும் மக்களுக்கு தீங்குவிளைவிக்கக்கூடியதாக தோன்றக்கூடிய எந்த கொள்கையையும், எந்த நடவடிக்கையையும் எதிர்த்து வாதாட, கேள்விகேட்க, சுதந்திரமாக விமர்சனம் செய்ய, எதிர்ப்பு – ஆதரவு உட்பட யதார்த்தத்தை சுதந்திரமாக பார்க்கும் உரிமையை எழுத்தாளர்கள் அனுபவிக்கிறார்கள். எனவே, கருத்துகூறும் உரிமை என்பது விமர்சிக்கும் உரிமையையும் உள்ளடக்குகிறது. ஏதேனும் ஒரு சாக்கைக்கூறி, அதுவும் நிதியுதவி அளிக்கிறோம் என்ற காரணம்கூறி எந்த அரசாங்கமும் இந்த உரிமையின்மீது கைவைக்கமுடியாது. ஜனநாயக மானது என்றுகூறிக்கொள்ளும் அரசாங்கம் இதைச் செய்யமுடியாது. மாறாக, ஜனநாயக விரோத, பாசிச அரசாங்கம் மட்டுமே இதுபோன்ற தலையீடுகளைச் செய்யமுடியும்.

நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் தீங்குவிளைவிக்கக்கூடிய தேச விரோதம் என்ற பிரச்சினைக்கு வருவோம். அரசாங்கத்தின் ஏதாவதொரு கொள்கை மக்களுக்கு தீங்குவிளைவிப்பதாக இருந்தால், அந்த அரசாங்கம் அல்லது அதன் கொள்கைதான் தேச விரோதமே தவிர, அக்கொள்கை மீதான விமர்சனம் தேச விரோதமானதல்ல. எழுத்தாளர் செய்திருக்கக் கூடிய வேலையானது சமுகத்தின் பல்வேறு பிரிவினரிடையேயுள்ள ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் ஏதேனும் இடையூறு செய்கிறதா இல்லையா என்பது குறித்த உத்திரவாதத்தை இந்த படிவமானது கேட்கிறது. புத்தகத்தின் வெளியீட்டாளர்தான் இவ்விஷயத்தை தீர்மானிக்கவேண்டும். அரசாங்கமோ அதன் அதிகாரவர்க்கமோ இவ்விஷயத்தின் நீதிபதிகளாகமுடியாது. மேலும் இது சட்டம் சம்மந்தப்பட்ட விஷயமுமாகும். இதனர்த்தம், தன் உள்ளடக்கம் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் குலைக்காது என்ற உத்திரவாதத்தை எல்லா எழுத்தாளர்களும் கொடுக்கவேண்டும் என்பதில்லை. NCPULலின் அதிகாரவர்க்கத்தினர் தங்கள் சேவை சட்டங்களுக்கும் அடிபணிந்து சேவை அடிமைகளாய் இருப்பதாக கூறிக்கொள்ளலாம். ஆனால், எழுத்தாளர்களை உள்ளடக்கிய இந்த சமுதாயம் அரசாங்கத்திற்கு அவ்வாறு அடிபணிய வேண்டிய அவசியமில்லை.

இன்னும் சில முக்கிய கேள்விகள் உள்ளடங்கியிருக்கின்றன. இதுவரையில் இந்த உறுதிமொழிப் படிவம் உருது எழுத்தாளர்களுக்க அனுப்பப் பட்டிருக்கிறது, தற்போது NCPULலின் வேலை என்ன? உருது மொழி மற்றும் இலக்கியத்தை மேம்படுத்துவது. சரி, இந்த மேம்பாட்டிற்காக வேலைசெய்ய கவுன்சிலிடமிருந்து அது ஏன் எதிர்பார்க்கவேண்டும்? ஏனெனில், உருது இலக்கியம் கஷ்டப்படுகிறது, எழுத்தாளர்களுக்குப் பணம் தேவை என அது கருதுகிறது. அந்த நிலையை பயன்படுத்திக்கொண்டு அவர்களை அரசாங்கம் நிர்ப்பந்திப்பது சரியா?

ஆனால் மற்றொரு தீவிர பிரச்சினை இருக்கிறது. இந்த திட்டத்தின்மூலம் மத்திய அரசாங்கமும் அதன் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும் இந்த மொழியை ஒரு குறிப்பிட்ட சமூகத்துடன் சம்மந்தப் படுத்த முயற்சித்துவருகின்றன. இது மேலும் அபாயமானதாகும். அரசாங்கத்தின் இந்நடவடிக்கையின் அர்த்தம் உருது எழுத்தாளர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர்களாகளில் ஈடுபடுபவரா? அக்குறிப்பிட்ட சமூகத்தினர் தேசவிரோத செயல அவ்வாறு இருக்குமானால், அது அந்த எழுத்தாளர்களுக்கு அல்லது அந்த சமூகத்தினருக்கு மட்டும் அவமரியாதையல்ல, உலகின் மிகப்பெரிய ஜனநாயகங்களுள் ஒன்று என்று பீற்றிக்கொள்ளும் எந்தவொரு நாட்டிற்கும் இது ஏற்கத்தக்கதல்ல. அல்லது ஆர் எஸ் எஸ் – பாஜக முன்மொழிகின்ற திரித்துக்கூறப்பட்ட தேசியவாத உணர்வு மற்றும் கோட்பாடானது இந்நடவடிக்கைக்குள் மறைத்துவைக்கப்படுகிறதா?

இந்திய தேசிய விடுதலை இயக்கத்தை பிற்போக்கானது என ஆர்எஸ்எஸ் அழைத்ததும் பாஜகவானது ஆர்எஸ்எஸ் உருவாக்கிய சித்தாந்த எல்லைக்குள் செயல்படக்கூடிய அதன் அரசியல் பிரிவேயாகும் என்பதும் நன்கறியப்பட்டதே. மாறாக, எவ்வளவோ குறைபாடுகள் இருந்தபோதிலும் அந்நிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலைபெறவேண்டி இந்து, முஸ்லீம் மக்களை இந்திய விடுதலை இயக்கமானது ஒற்றுமைப்படுத்தியது என்பதை மக்கள் நன்கறிவர். அந்நாட்களின் பிளவுவாத அடிப்படைவாதிகள் மட்டுமே இந்திய விடுதலை இயக்கத்தை பிற்போக்கானது என்று கூறமுடியும், இன்றைய அடிப்படைவாதிகள் மட்டுமே அப்படிப் பட்டதொரு தேசியவாதத்தில் அடைக்கலம் புகமுடியும்.

மேற்சொல்லப்பட்ட உறுதிமொழிப் படிவத்தில் உருது எழுத்தாளர்களை கையொப்பமிடச் சொல்வதானது அனைத்துவகையிலும் அப்பட்டமான ஜனநாயக விரோதமானதாகும். மட்டுமின்றி, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்கெதிராக துப்பாக்கியை திருப்பும் கவனமாக வடிவமைக்கப்பட்ட இரகசிய பாசிச திட்டமாகும். விசுவாசமற்றவர்களை சித்திரவதைசெய்தல், இனச்சுத்திகரிப்புசெய்தல் போன்ற வருந்தத்தக்க ஹிட்லரின் தந்திரத்துடன் ஒப்பிடக்கூடியதேயாகும் இது. ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உருவாக்குகிறோம் அல்லது பாதுகாக்கிறோம் எனும்பெயரில் அதை சூட்சுமமாக குலைப்பதே இதன் நோக்கமாகும். தேசிய நலனை பாதுகாக்கிறோம் எனும்பெயரில் தேசிய ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் குலைக்கும் உண்மையான நோக்கம் கொண்டதே இதுவாகும்.

இதில் பொதிந்துள்ள அபாயத்தை உணருமாறும் இதற்கெதிராக நாடுதழுவிய எதிர்ப்பு இயக்கத்தை கட்டுமாறும் மக்களை எமதுகட்சி அறைகூவி அழைக்கிறது.

*(Sources : The Hindu 03. April 2016; India Today 22. March 2016; Indian Express 19, March 2016)*

# இந்திய இராணுவத் தளங்களில் அமெரிக்க விமானங்களையும் போர்க்கப்பல்களையும் நிறுத்திக்கொள்வதற்கும் எரிபொருள் நிரப்பிக்கொள்வதற்கும் அனுமதிக்கும் முடிவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடுமையாக எதிர்க்கிறது

*13 ஏப்ரல் 2016 அன்று தோழர் பிரவாஸ் கோஷ், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் வெளியிட்ட அறிக்கை:*

இந்திய இராணுவத் தளங்களில் அமெரிக்க விமானங்களையும் போர்க்கப்பல்களையும் நிறுத்திக்கொள்வதற்கு, எரிபொருள் நிரப்பிக் கொள்வதற்கு, பழுதுபார்ப்பதற்கு மற்றும் வேறு சில காரணங்களுக்காக பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கும் இந்திய அரசாங்கத்தின் முடிவை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அந்நிய மண்ணில் போர்களை ஒன்றன்பின் ஒன்றாக நடத்தி, மற்ற நாடுகளின் இறையாண்மையைக் காலிலிட்டு அப்பட்டமாக மிதித்து, இராணுவ பலத்தைப் பயன்படுத்தி பல்வேறு நாடுகளில் ஆட்சியை மாற்றும் நாடகத்தை அரங்கேற்றுவது, விரிவாக்கம், வல்லாதிக்கம், கூட்டாதிக்கம் மற்றும் சர்வதேச ரௌடியிசம் போன்ற தனது கொள்கைகளின் ஒரு பகுதியாக உலகம் முழுவதும் தனது இராணுவத் தளங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளின் ஈடுபட்டுவரும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களோடு மிகவும் நெருக்கமான இராணுவ உறவு கொள்வதற்கான ஒரு படியே இது என்பது தெளிவாகிறது. இருநாடுகளிடையே பரஸ்பரம் இராணுவ ரீதியிலான ஆதரவு கொள்வதென 2004ஆம் ஆண்டே முன்மொழியப்பட்டதென்றும் ஆனால் அதற்கு அன்றைய யுபிஏ 1 அரசாங்கம் எதிர்ப்பு தெரிவித்துவிட்டது என்றும் ‘தி இந்து’ நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது. இந்திய மண்ணில் அமெரிக்க இராணுவ தளம் அமைப்பதற்கான எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை என்று என்டிஏ அரசாங்கம் மறுத்தாலும் கூட தெற்காசியப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஏகாதிபத்திய சக்தியாக ஏற்கனவே உருவெடுத்துவிட்ட இந்தியா கடல்வழிப் பாதுகாப்பை பலப்படுத்துகிறோம் என்ற பெயரில் இருநாட்டு உறவுகளை மேம்படுத்தவேண்டும் என்பதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு மேன்மேலும் தனது உறவை வலுப்படுத்திடும் வாய்ப்பு உள்ளது. ஆசிய பசுபிக் பகுதியில் அமெரிக்கா, இந்திய, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய சக்திவாய்ந்த மற்றும் குறைவான சக்திவாய்ந்த ஏகாதிபத்தியங்களிடையே வலுவான பெரும் இராணுவக் கூட்டணியை உருவாக்கவேண்டும் என்ற ஏகாதிபத்திய திட்டம் உள்ளது, இப்பிராந்தியத்தின் அமைதிக்குக் குந்தகம் விளைக்கும் அபாயம் இதில் உள்ளது.

இந்தியாவில் அமைதியை நேசிக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாசகார, தீய முயற்சிகளை முறியடிப்பதற்காக வலுவான, போர்குணமிக்க ஏகாதிபத்திய–எதிர்ப்பு அமைதிக்கான போராட்டத்தை வளர்த்தெடுக்க முன்வருமாறு அறைகூவல் விடுக்கிறோம்.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 28th May 2016

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# துருக்கியில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்தரங்கம் – உலகளாவிய உழைக்கும் மக்களின் ஒத்துழைப்புக்கு அறைகூவல்

துருக்கியில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவை பெருக்குவதற்காகவும், அதோடு பல்வேறு நாடுகளில் நடைபெறும் போராட்டங்களின் அனுபவங்கள் மற்றும் அணுகுமுறையை பெறுவதற்கும் பரிமாறிக்கொள்வதற்குமான அமைப்பை உருவாக்குவதற்காகவும், உலகம் முழுவதிலுமுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளிகளுக்கான ஆதரவை சர்வதேசியமயக்குவதற்காகவும் துருக்கியின் ஏகாதிபத்திய–எதிர்ப்பு முன்னணி 14 ஏப்ரல் 2016 முதல் 17 ஏப்ரல் 2016 வரை இஸ்தான்புல்லில் 7வது கருத்தரங்கை நடத்தியது. அகில இந்திய ஏகாதிபத்திய–எதிர்ப்பு அரங்கம் (ஏஐஏஐஎஃப்) மற்றும் சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டியின் சார்பாக தோழர் கே ஸ்ரீதர் அவர்கள் கலந்து கொண்டார்.

ரஷ்யா, உக்ரைன், பல்கேரியா, கிரீஸ், இத்தாலி, ஜெர்மனி, செக் குடியரசு, மொரொக்கோ, அயர்லாந்து, லெபனான், பய்ஸ் பாஸ்க்ஃ, கொலம்பியா, பெரு, மெக்சிகோ, குர்திஸ்தான், சிரியா, அதோடு துருக்கியைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பல்வேறு அமர்வுகள் நடைபெற்றன. அதில் உலகில் அரசியல் கைதிகள், வர்க்க மற்றும் வெகுஜன இயக்கங்களை ஒருங்கிணைத்தல், ஏகாதிபத்தியமும் அதன் தாக்குதல்களும், குர்திஸ்தான் பிரச்சினை, சிரிய அகதிகள் நெருக்கடி அதோடு இறுதியாக போர்குணமான போராட்டங்களும் ஜனநாயக வெகுஜன இயக்கங்கள் ஆகிய தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றன. 'ஏகாதிபத்தியம்–தீவிரவாதம் மற்றும் பாசிசம்' என்ற தலைப்பில் தோழர் ஸ்ரீதர் உரையாற்றினார்.

தோழர் ஸ்ரீதர் ஆற்றிய சுருக்கமான உரையில், தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனைகளால் வழி நடத்தப்படும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி எப்படி, கம்யூனிஸ்டுகளை மையமாகக் கொண்டு போர்குணமிக்க அமைதி இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் சோசலிச முகாம் வீழ்ந்த சோகத்திற்குப் பின்பு ஏகாதிபத்திய தாக்குதலும் வல்லாதிக்கக் கூட்டும் மீண்டெழுந்தபின்னர் பல்வேறு நாடுகளில் நடைபெறும் ஏகாதிபத்திய–எதிர்ப்பு இயக்கங்களை ஒருங்கிணைப்பதற்கான வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முன்னின்று வருகின்றது என்று விளக்கினார். கல்கத்தாவில் 2007இல் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மாநாட்டில், சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு மற்றும் மக்கள் ஒத்துழைப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டி (IAPSCC) என்ற பெயரில், நாம் விரும்பிய மக்கள் கமிட்டி உருவாக்கப்பட்டது. அதன் தலைவராக ராம்சே கிளார்க்கும் பொதுச் செயலாளராக மணிக் முகர்ஜியும் தேர்வு செய்யப்பட்டனர். தற்போது அந்தக் கமிட்டி சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு ஒருங்கிணைப்புக் கமிட்டி (IACC) என்று அழைக்கப்படுகிறது. அதன் இரண்டாவது சர்வதேச மாநாடு ஜனவரி 2009இல் லெபனானின் தலைநகரம் பெய்ரூட்டில் நடைபெற்றது. அந்த மாநாட்டை ஆய்வுகள் மற்றும் ஆவணப்படுத்துதலுக்கான ஆலோசனைவழங்கு மையம், பெய்ரூட், இன்னும் சில அரசியல் மற்றும் சமூக அமைப்புகள் மற்றும் சக்திகளோடு சேர்ந்து ஐஏபிஎஸ்சிசி செய்திருந்தது. அதன் மூன்றாவது சர்வதேச ஏகாதிபத்திய–எதிர்ப்பு மாநாடு 2011 இல் டாக்காவில் நடைபெற்றது.

தோழர் ஸ்ரீதர் மேலும் பேசுகையில் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சி என்ற இந்த காலகட்டத்தில் ஒவ்வொரு நாட்டிலும் ஆளும் முதலாளித்துவ–ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக வலுவான இயக்கங்களைக் கட்டியெழுப்புவதும் உலகளாவிய ஏகாதிபத்தியத் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவும் பாசிசத் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவும் முதலாளித்துவ–எதிர்ப்பு புரட்சிப் போக்கை முடுக்குவதற்காகவும் அனைத்து நாடுகளிலுமுள்ள புரட்சிகர சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். பாசிசம் என்பது கம்யூனிசத்தை சித்தாந்தரீதியாகவும் கம்யூனிஸ்டுகளை உடல் ரீதியாகவும் அழித்தொழிப்பதன் மூலமாக புரட்சியை வரவிடாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கையான எதிர்புரட்சி நடவடிக்கை என்று தோழர் சிப்தாஸ் கோஷ் வரையறுத்திருப்பதை அவர் சுட்டிக் காட்டினார். மார்க்சிசம் என்பது ஒரு வெல்லற்கரிய ஆயுதம், அதை சரியாகப் புரிந்துகொண்டு படைப்பாற்றலோடு பயன்படுத்தினால் அதை அடக்குவதற்கு எந்த ஒரு ஆயுதமும் புவியில் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினரும் ஐஏசிசி இன் பொதுச்செயலாளருமான தோழர் மணிக் முகர்ஜி மற்றும் பொதுச்செயலாளர் ஐஏசிசி அவர்கள் அனுப்பிய செய்தியை தோழர் ஸ்ரீதர் வாசித்தார்.

அவரது உரைக்குப் பின்னர், 'இடதுசாரி சாகச வாதம் என்றால் என்ன அதை எப்படிப் புரிந்து கொள்வது', மற்றும் 'முதலாளித்துவ – எதிர்ப்பு போராட்டங்களை ஏகாதிபத்திய – எதிர்ப்பு போராட்டங்களை ஒருங்கிணைத்துப் பார்ப்பது எப்படி' என்ற கேள்விகளை எழுப்பினர்.

தோழர் சிப்தாஸ் கோஷ், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் இன்றைய சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளரின் தேர்வு நூல்களின் தொகுதி 1 ஐயும், 'மாபெரும் ஸ்டாலின்' என்ற தலைப்பில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் எழுதிய நூலும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுவது எப்படி என்று தெரிந்துகொள்வதில் ஆர்வம் காட்டிய சில பிரதிநிதிகளிடம் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் ஏன் 'எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இந்தியாவின் ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி' என்ற புத்தகத்தின் பிரதிகள் வழங்கப்பட்டன. 'அரசியல் கைதிகளை' சர்வதேச அளாவிலான புகார் அளிக்கும் கமிட்டி, 2017இல் அடுத்த கருத்தரங்கை நடத்துவதற்காக மொரொக்கோ, கொலம்பியா, பல்கேரியா, இத்தாலி, மற்றும் உக்ரைன் தலைவர்களை உள்ளடக்கிய கமிட்டி அமைப்பது உள்ளிட்ட பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

## 15வது தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – 2016




எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வேட்பாளர் தோழர் சடையாண்டி சென்னையில் ஆர் கே நகர் தொகுதியில் 22.04.2016 வேட்புமனு தாக்கல் செய்ய செல்லும் காட்சி




எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வேட்பாளர் தோழர் வால்டேர் மதுரை வடக்கு தொகுதியில் 25.04.2016 வேட்புமனு தாக்கல் செய்ய செல்லும் காட்சி

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org